விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 04 சனிக்கிழமை (17.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 150

SATS TECH
யாழ். நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

# பொலிஸ் பஸ்களை இலக்கு வைத்து கொழும்பில் தற்கொலைத் தாக்குதல்

## 10 பேர் பலி; 95 பேர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பு கோட்டை சம்போதி விகாரைக்கு அருகில் ஹில்ட்டன் விடுதிக்கு முன்பாக நேற்று நண்பகல் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 7 பொலிஸார் உட்பட 10 பேர் பலியானதுடன் 95 பேர் படுகாயமடைந் துள்ளனர். கலகம் அடக்கும் பொலிஸாரை ஏற்றிச் சென்ற இரண்டு பஸ்களை இலக்கு வைத்து பகல் 12.05 மணி யளவில் இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள் ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)



## முதலமைச்சராகப் பிள்ளையான் ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம்



(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சராகத் தமிழ்மக் கள் விடுதலைப்புலிகளின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று மாலை 6.30 மணியளவில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சத்தியப் பிரமாண வைபவத்தில் கிழக்கு மாகாண சபைக்கு மூன்று அமைச்சர்கள் உட்பட 15 உறுப்பினர்கள்பதவி ஏற்றுள்ளனர். மாகாண அமைச்சர்களாக துரை ரட்ணசிங்கம் நவரட்ணராஜா, விமலவீர திஸா நாய க்க, மீரா சாகிபு உதுமாலெப்பை ஆகியோர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதாகவும் இன்னுமொரு அமைச்சர் விரைவில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார் எனவும் ஜனாதிபதி செயலக ஊடகப் பணிப்பாளரான மகிந்த இல்லே பெரும தெரிவித் தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர (10 ஆம் பக்கம் பார்க்க)

## மற்றொரு தாழமுக்கம்

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் மற்றொரு தாழ முக்கம் உருவாகியுள்ளதாக இலங்கை வானிலை அவதான நிலையம் தெரிவித்துள் ளது.

வங்காளவிரிகுடாவில் ஏற்கனவே உரு வான நர்கீஸ் தாழமுக்கத்தின் தாக்கத்திலி ருந்து உலகம் மீளுவதற்குள் மற்றொரு தாழ முக்கம் உருவாகி வளர்ச்சி பெற்று வருவதா கவும் குறிப்பிடப்படுகின்றது.

14 ஆம் திகதி முதல் இத் தாழமுக்கம் உரு வாகி வளர்ச்சி பெற்று வருகின்றது. இத் தாழ முக்கம் இலங்கையி (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஹிஸ்புல்லா உட்பட மூவர் தனித்து இயங்க முடிவு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் முதல்வர் ஆசனத்திற்குப் பிள்ளையானை நியமித்த தற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தலைமையிலான மூவர் குழு தனித்து இயங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இது குறித்து கிழக்கு மாகாண ஆளுந ருக்கு நேற்று மாலை அவசர கடிதம் ஒன்றை யும் அனுப்பி வைத்திருப்பதாக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

கிழக்கின் முதலமைச்சராகும் தகுதி பிள் ளையானுக்கு இல்லை என்று தமது கடிதத் தில் குறிப்பிட்டுள்ள எம்.எல்.ஏ.எம். ஹிஸ் புல்லா தலைமையிலான குழுவினர் கிழக்கு முதலமைச்சர் விடயத்தில் எடுக்கப்படும் ஒவ் வொரு நடவடிக்கை குறித்தும் தம்முடன் முன்கூட்டியே ஆராயப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு தேர்தலுக்கு எதிராக ஐ.தே.கட்சி ஆர்ப்பாட்டம்

### கொடும்பாவிகள் எரிப்பு

(கொழும்பு)

கிழக்கில் நடத்தப்பட்ட தேர்தல் மோசடிக ளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தலைநகர் கொழும்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர் பசில் ராஜபக்ஷ ஆகியோரினது கொடும்பாவி களை எரித்தனர்.

கொழும்பு மருதானையில் நேற்று வெள் ளிக்கிழமை பிற்பகல் இப் போராட்டம் நடத்தப் பட்டது. மருதானைச் சந்தியில் பிற்பகல் ஒரு மணியளவில் தொடங்கி 2 மணி வரை நடை பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளையானை நியமிப்பதே இந்தியாவின் விருப்பம்

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப் பின் தலைவர் பிள்ளையான், கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக வரவேண்டும் என இந்தியா விருப்பம் தெரிவித்ததாகத் தக வல்கள் வெளியாகியுள்ளன.

இந் நிலையில் முதலமைச்சர் பதவியைப் பிள்ளையானுக்கு வழங்க மறுத்தால் இந்தி யாவின் எதிர்ப்பை இலங்கை அரசு சந்திக்க வேண்டும் என்றதால் பிள்ளையானை மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளதாக இடதுசாரி முன் னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணா ரட்ண குற்றஞ்சாட்டியுள்ளார். (ச-5)

## பதவிகளுக்காகப் பேதங்களை ஏற்படுத்தாது மக்களின் நன்மைக்கு வழிவகுப்போம்-ஜனாதிபதி

(கொழும்பு)

பதவிகளுக்காக பேதங்களை ஏற்படுத்திக் கொள்ளாமல் பெற்றுக் கொண்ட வெற்றியி னால் மக்கள் நன்மையடைவதற்கு அனை வரும் வழிவகுக்க வேண்டும் என்று ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப் பாட்டின் கீழிலிருந்த கிழக்கு மாகாணத்தை மீட்டு சாதாரணமானதொரு தேர்தல் நடத்தப் பட்டமை குறித்து நாம் இந்தக் கட்டத்தில் மகிழ்ச் சியடைய வேண்டும்.

கிழக்கு மக்கள் ஜனநாயகத்திற்கு மதிப் பளித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)



# மும்பை வேகப் புயல்களின் பந்துவீச்சில் கங்குலி அணி 67 ஓட்டங்களுடன் சுருண்டது

## ஜெயசூர்யா மீண்டும் அதிரடி

(மும்பை)

மும்பை இந்தியன்ஸின் வேகப் புயல்களிடம் சிக்கி கொல்க்த்தா நைட் ரைடர்ஸ் அணி 67 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

சனத் ஜெயசூர்யாவின் அதிரடியான துடுப்பாட்டத்தால் மும்பை இந்தியன்ஸ் அணி இலகுவாக வென்று தொடர்ச்சியாக 5-வது வெற்றியைப் பெற்றது.

ஐ.பி.எல் தொடரில் நேற்று இரவு மும்பையில் நடைபெற்ற லீக் சுற்றின் 38-வது போட்டியில் சச்சின் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சச்சின் டெண்டுல்கர் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி மும்பை இந்தியன்ஸின் வேகப் புயல்களிடம் சிக்கி 15.2 ஓவர்களில் 67 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் கங்குலி, அகாக்கர் ஆகியோர் தலா 15 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் பொலக் 4 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் பிராவோ, தெனாலி மற்றும் ராஜீ ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 68 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் ஆடிய மும்பை இந்தியன்ஸ் அணி ஜெயசூர்யாவின் அதிரடியில் 5.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 68 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இதில் ஆட்டமிழக்காமல் சனத் ஜெயசூர்யா 17 பந்துகளில் (6 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உ[illegible]) 48 ஓட்டங்களையும் உத்தப்பா 9 ஓட்டங்களையும் எடுத்தனர். அணித்தலைவர் டெண்டுல்கர் ஓட்டமெதனையும் எடுக்காமல் அக்தரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

**ஐ.பி.எல் தொடரில்குறைந்த இலக்கு**

ஐ.பி.எல் தொடரில் ஒரு அணி பெற்ற குறைந்த ஓட்ட இலக்காக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் இலக்கு பதிவானது.

இவ் வெற்றியின் மூலம் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி தான் ஆடிய 9-வது போட்டியில் பெறும் தொடர்ச்சியான 5-வது வெற்றியாகும். (5)




# மிஸ்ரா ஹட்ரிக்; டில்லி 'திரில்' வெற்றி

## லக்ஸ்மன் அணி அரையிறுதி வாய்ப்பை இழந்தது

(புதுடில்லி)

துடுப்பாட்டத்தில் காம்பீர், தவான் அரைச்சதம் விளாச-பந்து வீச்சில் அமித் மிஸ்ரா ஹட்ரிக் விக்கெட் வீழ்த்த, டில்லி டேர் டேவில்ஸ் அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

இறுதிவரை போராடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி 8-வது தோல்வியை சந்தித்தது. இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது-20 தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினமிரவு டில்லியில் நடைபெற்ற லீக் சுற்றின் 37-வது போட்டியில் ஷேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் டெக்கான் அணியின் தலைவர் வி.வி.எஸ். லக்ஸ்மன் காயம் காரணமாக தொடரிலிருந்து விலகியதால் அடம் கில்கிறிஸ்ட் அணித் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கில்கிறிஸ்ட் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி காம்பீர், தவானின் அதிரடி அரைச்சதத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள நிறைவில் 4விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங்களை எடுத்தது.

இதில் காம்பீர் 48 பந்துகளில் (7 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 79 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் தவான் 52 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 68 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் ஓஜா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 195 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி அப்ரிடி, ரோகித் சர்மா மற்றும் வேணுகோபால் ராவ் ஆகியோர் அதிரடியாக ஆடியபோதும் மிஸ்ராவின் துல்லியமான பந்து வீச்சில் 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 12 ஓட்டங்கள் வித்தியாசத்தால் தோல்வியடைந்தது.

இதில் ரோகித் சர்மா 18 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர் உட்பட) 35 ஓட்டங்களையும் வேணுகோபால் ராவ் 18 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 34 ஓட்டங்களையும் மற்றும் அப்ரிடி 14 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சிறப்பாக பந்துவீசி ஹட்ரிக் சாதனை படைத்த அமித் மிஸ்ரா 4 ஓவர்கள் பந்துவீசி 17 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் மற்றும் மெக்ராத் மகரூப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப் போட்டியின் நாயகனாக அமித் மிஸ்ரா தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் ஷேவக் தலைமையிலான டில்லி டேர் டெவில்ஸ் அணி தான் விளையாடிய 10 போட்டிகளில் 5-வது வெற்றியை பெற்று புள்ளிகளின் அடிப்படையில் 5-வது இடத்தில் உள்ளது.



இதேவேளை இத் தோல்வியுடன் லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 10-வது ஆட்டத்தில் 8-வது தோல்வியை சந்தித்து புள்ளிகளின் அடிப்படையில் 7-வது இடத்தில் உள்ளதுடன் அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்துள்ளது.

**இரண்டாவது ஹட்ரிக் சாதனை**

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் இறுதி ஓவரில் 15 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இக் கட்டான சூழ்நிலையில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் ரவி தேஜா, ஓஜா மற்றும் ஆர்.பி.சிங் ஆகியோரின் விக்கெட்டுக்களை தொடர்ச்சியாக வீழ்த்தி டில்லி டேர் டேவில்ஸ் அணியின் பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா ஹட்ரிக் சாதனை படைத்தார்.

இதன் மூலம் ஐ.பி.எல் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பாலாஜிக்கு அடுத்தபடியாக அமித் மிஸ்ரா ஹட்ரிக் சாதனை படைத்தார். (5)

# பெங்களூர் தொடர் குண்டுவெடிப்பு எதிரொலி

## நாடு திரும்புகின்றனர் வோர்ன், சிமித்?

## ஐ.பி.எல்.தொடருக்கு புதிய சிக்கல்

(புதுடில்லி)

ஜெய்ப்பூர் குண்டுவெடிப்பு சம்பவத்தை அடுத்து பாதுகாப்பு காரணமாக ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தலைவர் வோர்ன்,



சிமித் ஆகியோர் தங்களது தாயகம் திரும்பப் போவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதையடுத்து ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் ஜெய்ப்பூரில் இன்று மோதும் போட்டி நடக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) இருபது-20 தொடரை சென்னை, மும்பை ஜெய்ப்பூர் உள்ளிட்ட 8 முக்கிய நகரங்களில் நடத்துகிறது. இந்நிலையில் கடந்த மே 13இல் ஜெய்ப்பூரில் எட்டு இடங்களில் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இதில் 80க்கும் மேற்பட்டோர் பலியாகினர். இதையடுத்து ஜெய்ப்பூர் நகரை மையமாகக்கொண்ட ராஜஸ்தான் றோயல்ஸ் அணியில் விளையாடி வரும் சர்வதேச வீரர்கள் கலக்கமடைந்துள்ளனர். பீதியில் இவர்கள் போட்டிகளை ரத்து செய்துவிட்டு நாடு திரும்ப தயாராகி வருவதாக செய்திகள் வெளியாகி உள்ளது.

இது குறித்து ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் முகாமையாளரான அவுஸ்திரேலியாவின் டேரன் பெரி அந்நாட்டிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், விமானம் மூலமாக ஜெய்ப்பூரிலிருந்து விரைவில் வெளியேறிவிடுவது நல்லது என நினைக்கிறேன். இங்குள்ள சூழ்நிலைகள் பாதுகாப்பானதாக இல்லை. கிரிக்கெற் என் வாழ்க்கைக்கு நல்லதுதான். ஆனால் மெல்பேர்னில் எனக்கு ஒரு மனைவி யும், மூன்று குழந்தைகளும் இருப்பதை மறந்துவிட முடியாது.

நான் இல்லாத உலகை அவர்களாலும் நினைத்து பார்க்க முடியாது. பல உயிர்களை பலி கொண்ட இச்சம்பவம் குறித்து வோர்னும் தனது அச்சத்தை என்னிடம் தெரிவித்தார். இங்கு வருவதற்கு ஒருநாள் முன்னதாக குண்டுவெடிப்பு நடந்திருந்தால், நாங்கள் வந்திருப்போமா என்பதே சந்தேகமாகிவிடும். இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த அதே இடத்தில் நான் நின்று கொண்டிருந்தேன். அதை தற்போது நினைத்தாலும் மிகவும் பயங்கரமாக இருக்கிறது. நாங்கள் தங்கியிருக்கும் ஹோட்டலில் இருந்து 2 கி.மீ.தூரத்தில்தான் இது நடந்துள்ளது. இவ்வாறு பெரி தெரிவித்தார்.

வீரர்களுக்கு சிறப்பான பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது என ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் நிர்வாக அதிகாரி பிரேசர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், பாதுகாப்பு மிக முக்கியம். ஐ.பி.எல்.அதிகாரிகள் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொடுத்துள்ளனர். மைதானத்தை சுற்றியுள்ள பகுதிகளில் மோப்ப நாய்கள் மற் றும் குண்டுகளை அகற்றும் குழுக்கள் தீவிர பணியில் உள்ளனர். அசம்பாவிதங்கள் ஏதும் நடக்காது என்பதில் உறுதியாக இருக்கிறோம் என்றார்.

**லலித் மோடி மறுப்பு**

வோர்ன், ஷேன் வொட்சன் மற்றும் தென்னாபிரிக்காவின் சிமித் நாடு திரும்பவுள்ளதாக வெளியான செய்தியை ஐ.பி.எல்.தலைவர் லலித் மோடி மறுத்துள்ளார். இது குறித்து அவர் கூறு கையில், பெங்களூர் அணிக்கு எதிரான இன்றைய போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ்அணிக்காகவிளையாடும் அனைத்து அவுஸ்திரேலிய வீரர்களும் பங்கேற்பார்கள்.

குண்டுவெடிப்புக்கு பின் அவர்கள் போட்டியில் விளையாட வீரர்கள் தயக்கம் காட்டினார்கள். சிறிது பதட்டமடைந்தாலும் தற்போது பங்கேற்பதில் உறுதியாக இருக்கிறார்கள். பாதுகாப்பு ஏற்பாடுகளை குறித்து வெளிப்படையாக கூறமுடியாது. போட்டியை காண வருவோர் பைகள், லைட்டர்கள், தீப்பெட்டிகள், போத்தல்கள் ஆகியவற்றை கொண்டுவர தடை விதிக்கப்பட்டுள்ளது. வீரர்கள் இருக்கும் பகுதிகளில் தடுப்பு எல்லைகள் அமைக்கப்படும். அவர்கள் அருகில் செல்ல யாருக்கும் அனுமதி வழங்கப்படாது. பாதுகாப்பு நடவடிக்கைகளில் வீரர்கள் முழுதிருப்தி அடைந்துள்ளனர் என்றார். (அ-5)

## இன்று ஒரு தகவல்

# எது மகிழ்ச்சி ?

"அவருக்கு என்ன கொடுத்து வைச்ச மனுஷன்" என்று ஒருவரைச்சுட்டிக்காட்டிச் சொன்னார் நண்பர்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன். "சொந்தமாகக் கார் வைத்திருக்கிறார். அழகான பங்களா கட்டியிருக்கிறார் சந்தோஷத்துக்கு என்ன குறைச்சல்?" என்றார்.

அவர் நினைப்பது போலத்தான் நாம் எல்லோரும் நினைக்கிறோம். ஆனால் பெரியவர்களெல்லாம் அப்படி நினைக்கவில்லை.

ஓர் அழகான வீட்டில் இருக்கிறோம் என்றால் அது நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும். ஓர் அழகான காரில் போகின்றோம் என்றால் அது நம்மைப் பரவசப்படுத்தும். அதனால் நம்முடைய உண்மையான மகிழ்ச்சிக்கு வீடும் காரும் தான் காரணம் என நினைக்கிறோம்.

ஆனால், உண்மை அப்படி அல்ல.

இந்த வீடும் காரும் நம்முடைய மகிழ்ச்சிக்கு ஒரு தூண்டு கோல்! அவ்வளவு தான்.

இந்தப் புறப் பொருட்கள் இல்லாமலேயே எல்லையற்ற ஆனந்தத்தில் நாம் மூழ்க முடியும். அதைக் புரிந்து கொள்ளாமல் வீடு–கார்–நிலம் –புகழ்–பதவி இப்படி உலகப் பொருட்களை சேகரிப்பதிலேயே நம் முடைய சக்தியை வீணாக்குகிறோம்!

நமக்குள்ளே ஒரு விழிப்பு ஏற்படும் போது, நாம் சேகரித்த பொருட்களெல்லாம் நம்க்கு சுவையாகவே இருக்கும். அதையெல்லாம் பாதுகாப்பதிலேயே நமக்கு நேரம் சரியாக இருக்கும்.

இவற்றுக்கெல்லாம் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள். உலகத்தில் எவையெல்லாம் நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறதோ அவற்றையெல்லாம் நமக்கு உடமையாக்கிக் கொள்ள நினைக்கிறோம்.

அனுபவசாலிகள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? "எந்தப்பொருள் மேலும் பற்றுவைக்கக்கூடாது. ஆனால் அவற்றையெல்லாம் உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். அவையெல்லாம் உங்களுடைய சௌகரியத்திற்காக ஏற்பட்டவை... அவ்வளவு தான்!" என்கிறார்கள். இச்சந்தர்ப் பத்தில் இன்னொரு விஷயத்தையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த மாதிரி அறிவுரைகளை மட்டும் கேட்பதனால் எந்தவிதப் பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை. இவற்றையெல்லாம் நாம் அனுபவத்திற்கு கொண்டு வர வேண்டும். அப்பொழுது தான் அது நமக்கு உபயோகப்படும்.

அனுபவம் அற்ற அறிவு எதற்கும் உபயோகப் படாது. இவையெல்லாம் பெரியவர்கள் கூறும் கருத்து.

"மரணம் வாழ்வுக்கு எதிரி இல்லை என்கிறார்கள்" அதற்காக மரணத்தைக் கண்டு பயப்படாமல் இருக்க முடியுமா ? அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்,

மரணம் என்பது வாழ்வுக்கு எதிரி இல்லை. உண்மையில் வாழ்வில் தான் மரணம் அடங்கியிருக்கிறது. மரணம் தான் வாழ்வுக்கு –ஆதாரம் வாழ்வின் கவர்ச்சிக்கும் –ஆனந்தத்துக்கும் –ஆவலுக்கும் மரணம்தான் ஆதாரம். கொஞ்சம் ஆழமாகச் சிந்தியுங்கள் புரியும் என்கிறார்கள்.

அதை நினைத்தாலே பயமாக இருக்கிறது. பிறகு எப்படி சிந்திக் முடியும்? சரி அதையெல்லாம் விடுங்க இப்பொழுது நம்முடைய கதைக்கு வருவோம்.

ஒரு சாலையில் திடீரென ஒரு விபத்து! கார் ஒரு ஆளை மோதிவிட்டது. அடிபட்டவன் கீழே விழுந்து கிடக்கிறான். ஒரு அம்மா ஓடிப்போய் அடிபட்டவனுக்கு உதவி செய்ய கீழே குனிந்தார்.

அதற்குள் இன்னொரு ஆள் ஓடிவந்து அந்த அம்மாவை விலகி நிற்கச் சொல்லி விட்டு அந்த ஆளுக்கு முதலுதவிச் சிகிச்சை செய்ய ஆரம்பித்தான்.

அந்த அம்மா அவனைப் பார்த்து, "இதோ பாரப்பா... உன்னுடைய முதலுதவி சிகிச்சை எல்லாம் முடிந்து டாக்டரிடம் போகலாம் என்ற கட்டத்தில் என்னிடம் சொல்" என்றார். "ஏன் ?" என்று கேட்டான் அவன். "நான் தான் டாக்டர்!" என்றார் அந்த அம்மா!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 17ஆவது திருத்தச்சட்ட மூலம் தொடர்பாக நீதி மன்றம் செல்ல எதிர்க்கட்சிகள் ஆராய்வு

(கொழும்பு)

எதிர்காலத் தேர்தல்கள் நீதியாகவும் நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் 17 ஆவது திருத்தச்சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பாக நீதிமன்றத்தின் உதவியை நாடுவது பற்றி ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆராய்ந்து வருக்கின்றன.

ஜனநாயகக் கட்சிகள் தேர்தல்களில் போட்டியிட முடியாதநிலை காணப் படுவதாக சிறிலங்கா மூஸ்லிம் காங்கிரஸ் பிரதிப் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் ஊடக வியலாளர் மாநாட்டில் கூறினார். சுதந்திர தேர்தல்கள் ஆணைக்குழு பொதுச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் ஆணைக்குழு போன்றன 17 ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு அமைய நியமிக்கப்படாத நிலையில் எதிர்காலத் தேர்தல்களில் அச்சமின்றி கலந்து கொள்வது சாத்தியமற்றது என அவர் குறிப்பிட்டார்.

தற்போதுகாணப்படும் தேர்தல் சட்டமூலத்தில் காணப்படும் ஓட்டைகள் காரணமாகவே கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் இவ்வாறு காணப்பட்டதாக தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டியதாக காரியப்பர் தெரிவித்தார். தற்போது காணப்படும் நிலையில் எதிர்காலத் தேர்தல் களில் போட்டியிடுவதா இல்லையா என்பது பற்றி எதிர்க்கட்சிகள் தீர் மானிக் க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன என்று முஸ்லிம் காங்கிரசின் பிரதிப் பொதுச் செயலாளர் குறிப்பிட்டார்.

நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தின் திருக்கோயில் பகுதியில் 98வீதமான வாக்குகள் பலவந்தமாக நிரப்பப்பட்டிருப்பதாக நிசார் காரியப்பர் மேலும் கூறினார். (அ–5)

# அரச ஊழியர்களுக்கு கண் பரிசோதனை சுகாதார அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

சகல அரசாங்க ஊழியர்களுக்கும் கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். இது பற்றி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு கண் வைத்திய சாலை மற்றும் கண் தொழில் நுட்பக் கல் லூரி ஆகியன இணைந்து இத் திட் டத்தை மேற்கொ ள்ளவுள்ளன. இதற் கமைய அடுத்த மாதத்தில் ரயில்வே திணைக்களம், மத்திய போக்குவரத்துசபை, கொழும்பு மகஸின் சிறைச்சாலை மற்றும் ரத்மலான கண்பார்வையற்றோர் வித்தியாலயம் ஆகியவற்றின் ஊழியர்கள் கண் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவிருக்கின்றனர்.

கண் சத்திர சிகிச்சை வைத்தியர்களும் தொழில்நுட்பவியலாளர்களும் இந்த பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர். அடுத்து வரும் காலங்களில் ஏனைய அரசாங்க நிறுவனங்களின் ஊழியர்களும் கண் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். இத்திட்டத்தின் ஆரம்ப வைபவம் அண்மையில் சுகாதார அமைச்சில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# சிக்குன் குனியா பாதிப்பினால் இரத்தினபுரி பாடசாலைகளில் மாணவர் வரவு வீழ்ச்சி

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள சில பாடசாலைகளில்சிக்குன் குனியா மற்றும் வைரஸ் காரணங்களினால் மாணவர் வரவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதே நிலை மேலும் தொடருமாயின் மேற்படி மாணவர் வரவில் வீழ்ச்சியான பாடசாலைகளை தற்காலிகமாக மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு மென சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் தெரிவித்தார்.

இப்பகுதி பெரும்பாலான பாடசாலைகளில் இத்தகைய மாணவர் வரவு வீழ்ச்சி நிலைகுறித்து முதலமைச்சரிடம் வினாவியபோது அதற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை இப்பகுதியில் பரவும் வைரஸ் காய்ச்சல், சிக்குன் குனியா என்பவற்றுக்கு சுகாதாரத் தரப்புக்கள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அத்துடன் பலாங்கொடை வலயத்திற்குட்பட்ட சில பாடசாலைகளில் கடந்த வாரத்தில் சுற்றாடல் சுத்தமும் இடம்பெற்றது. இதற்கு இரத்தினபுரி மாவட்ட கல்விப்பணிப்பாளர் எம். வீ.ஜயசிங்க உத்தரவிட்டிருந்தார்.

அத்துடன் எஹலியகொடை, குருவிற்ற கிரியெல்ல, எம்பிலிப்பிட்டிய, நிவித்திகல, பல்லெபெத்த, கொடக்கவெள போன்ற பகுதிப் பாடசாலை மாணவர்கள் இந்நிலையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ–5)

## இராசிபலன்

17.05.2008
(வைகாசி 04, சனிக்கிழமை)
சித்திரை முன்னிரவு 11.00 மணிவரை
திரயோதசி பின்னிரவு 04.20 மணிவரை
இராகுகாலம் 08.53-10.23 மணிவரை
சுபநேரம்-02.53-04.23 மணிவரை
சனிப்பிரதோஷ விரதம்

| | |
|---|---|
| மேடம் | செல்வாக்கு, காரிய அனுகூலம், குடும்ப மகிழ்ச்சி, அபூர்வசந்திப்பு. |
| இடபம் | சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், ஆரோக்கியம், போசனசுகம். |
| மிதுனம் | அஜீரண ரோகம், வேலைச் சுமை, முயற்சி தாமதம், தனவிரயம். |
| கடகம் | உறவினர் சந்திப்பு, மனச்சஞ்சலம், ஆரோக்கியக்குறைவு. |
| சிங்கம் | இனிய சம்பவம், கூட்டுமுயற்சி, வாக்குமேன்மை, போசனசுகம். |
| கன்னி | விவாதம், கௌரவக்குறைவு, திடீர் நன்மை, பணவிரயம். |
| துலாம் | கற்பனை மிகுதி, சயனசுகம், நண்பர்கள் சந்திப்பு, போசனசுகம். |
| விருச்சிகம் | தந்தைவழி உறவு, உணர்ச்சி வசப்படல், உஷ்ண வியாதி. |
| தனுசு | செய்தொழில் நன்மை, கீர்த்தி, காரியநன்மை, விருந்துபசாரம். |
| மகரம் | அதிகாரம், தொழில் முன்னேற்றம், பெரியோர் உதவி. |
| கும்பம் | ஆரோக்கியக்குறைவு, கட்டுப்பாடு, புதிய முயற்சி. |
| மீனம் | வாகனபயம், எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், போசனசுகம். |

வளவன்

# உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க மாநாடு யூலை மாதம் கனடாவில் நடைபெறும்

(கொழும்பு)

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் உலகளாவிய மாநாடு எதிர் வரும் யூலைமாதம்பிற்பகுதியில்கனடா நாட்டில் உள்ள ரொறண்ரோ மாநிலத்தில் நடைபெறவிருக்கின் றது.

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் எஸ்.செல்லையா தலைமையில் நடைபெறவிருக்கும் தமிழ் பண்பாட்டு மாநாட்டில் உலகளாவிய நாடுகள் பலவற்றிலிருந்தும் தமிழ் அறிஞர்கள், கல்வி மான்கள், கலாசார நிகழ்வினை நடாத்தக் கூடியவர்கள் என பல்துறை சார்ந்தவர்கள் பங்கு கொள்வார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பண்பாட்டு விழாவில் தமிழ் மொழி பண்பாட்டு வளர்ச்சி ஆகியவற்றின் வளர்ச்சிக்கு தொண் டாற்றி வருவோர்கள் அந்த மாநாட்டில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளார்கள் என தெரிவிக்கப்படுகிறது. (அ)



சொல்வேந்தர் பொன். சுகந்தனின் சமூக அரங்கு நிகழ்வு அண்மையில் துன்னாலை வடிவேல் மண்டபத்தில் நடைபெற்ற போது சமூக அரங்கின் ஊடாக கால்கள் ஊனமுற்ற மாணவர் ஒருவருக்கு கனடா ஒட்டாவா பல்கலைக்கழக மாணவர்களின் நிதியுதவியினை ஒய்வுபெற்ற பாராளுமன்ற அறிக்கையாளர் பொ.இராஜதுரை வழங்குவதையும் அருகில் சொல்வேந்தன் பொன்.சுகந்தன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

அறவழி போராட்டக்குழு கனேடிய உலகப் பல்கலைக் கழகசேவை நிறுவனத்தின் ஆதரவுடன் நடாத்தப்பட்ட பற்றுவலைப்பு, தோல் பொருள் உற்பத்தி, நீர்க்குழாய் பொருத்துதல் மற்றும் அலுமினியம் பொருத்துதல் பயிற்சிகளில் பயின்ற பயிலுனர்களால் உருவாக்கப்பட்ட பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் 19ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.15மணிக்கு அறவழி தொழில் பயிலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கனேடிய உலகப் பல்கலைக் கழக சேவை நிறுவன பிரதி வெளிக்களப் பணிப்பாளர் வே.ஜெயராஜசிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-7)




## கடமை நிறைவேற்று அதிபர் நியமனம்

(அல்வாய்)

அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு கடமை நிறைவேற்று அதிபராக வே.விநாயகமூர்த்தி உடனடியாக செயற்படும்படி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராவார். (ஓ-19)

## வருடாந்த மஹோற்சவம்

(மருதங்கேணி)

துன்னாலை வடக்கு அல்லையம்பதி சிவசுப்பிரமணிய கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 10ஆம்திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

இவ்வுற்சவத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் நாளை மறுநாள் திங்கட்கிழமை வைகாசி பௌர்ணமியில் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ஓ-35)

◆◆◆

(இருபாலை)

தென்கோவை கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான மஹோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 30 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 31ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், யூன் 1 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை 9.30 மணிக்கு தீர்தத்திருவிழாவும், மாலை 3 மணிக்கு கொடியிறக்க வைபவமும் 2ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3மணிக்கு வசந்தோற்சவமும் இடம்பெறும்.

மஹோற்சவ பிரதம குருவாக சிவஸ்ரீ சதா மகாலிங்கசிவக் குருக்கள் விளங்கவுள்ளார். (அ-136)

# திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் இப்ஸனின் 'தலைமைக் கட்டடக்காரன்'

## நாளை கலைத்தூது கலையகத்தில் மேடையேறுகின்றது

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் உலகப் புகழ்பெற்ற நாடக ஆசிரியர்களுள் ஒருவரான ஹென்றிக் இப்ஸனின் புகழ் பெற்ற நாடகங்களில் ஒன்றான "தலைமைக் கட்டடக்காரன்" (The Master Builder) என்னும் நாடகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை இரு காட்சிகளாக 286. பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது. இலவசமாக காண்பிக்கப்படவுள்ள இந் நாடகம் மு.ப.10 மணிக்கு மாணவர்களுக்காகவும், பி.ப.3.30மணிக்கு ஏனையவர்களுக்காகவும் அறிக்கை செய்யப்படவுள்ளது.

ஹென்றிக் இப்ஸன் நவீன நாடகத்தின் தந்தை என அழைக்கப்பட்டவர். நோர்வேஜிய மொழியில் இவர் எழுதிய யதார்த்த நாடகங்கள் கடந்த நூற்றாண்டில் ஐரோப்பா முழுவதிலும் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்ததுடன், சமூக மாற்றத்தின் குறிகாட்டிகளாகவும் போற்றப்பட்டன. இவரது "தலைமைக் கட்டடக்காரன்" என்னும் இந் நாடகம் யதார்த்த குறியீட்டு நாடக வகையைச் சேர்ந்ததாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் நிலவிய குடும்ப, சமூக சூழலைப் பின்னணியாகக் கொண்டு 1892 இல் இந் நாடகத்தை நோர்வேயின் தலைசிறந்த நாடக ஆசிரியரான இப்ஸன் படைத்திருந்தார். மனித வாழ்வியல் நடத்தையின் சில பரிமாணங்களைக் குறிப்பாக, மனிதனில் முரண்படும் உளவியல் யதார்த்தங்களையும், கற்பனைப் படிமங்களையும் ஒரு கட்டடக் கலைஞனின் வாழ்வியல் குறியீட்டினூடாக வெளிப்படுத்துகின்ற நாடகமாக இது அமைந்துள்ளது.

தமிழில் எம்.முத்தையாவினால் மொழி பெயர்க்கப்பட்டுள்ள இந் நாடக எழுத்துருவை, திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநரும், நாடக ஆசிரியருமான யோ.யோண்சன் ராஜ்குமார் நெறியாள்கை செய்துள்ளார். இந் நாடகம் திருமறைக் கலாமன்றம் இவ்வாண்டில் தயாரித்து வழங்கும் மூன்றாவது மிகப் பெரும் அரங்க அறிக்கையாக அமைகின்றது. (அ)

## துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை, இலங்கை வங்கியின் பொன்விழாவை முன்னிட்டு தமிழ் புத்தாண்டு நிகழ்வாக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் 20X20 மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் 19 ஆம்திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரட்ணம், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-52,19)

## நல்லூர் பிரதேச செயலக விளையாட்டுவிழா

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பி.ப.1.30மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட பதில் விளையாட்டு அதிகாரி எஸ்.துரைசிங்கம், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (அ-3,4)

# கலாசாரப் பெருவிழாவில் கலைஞர்களுக்கு கௌரவம்

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவு கலாசாரப் பேரவையின் பெருவிழா யூன் மாதம் பிற்பகுதியில் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். பிரதேச செயலர் ம.மரியதாசன் ஜெகூ தலைமையில் நடைபெறவிருக் கும் இந்தக் கலாசாரப் பெருவிழா இயல், இசை, நாடகம் அடங்கிய முத்தமிழ் விழாவாகக் கொண்டாடப்படவிருக்கின்றது.

இக் கலாசாரப் பெருவிழாவில் யாழ். பிரதேசத்தைச் சேர்ந்த (50) ஐம்பது வயதுக்கு மேற்பட்ட பல்துறை சார்ந்த கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். 'யாழ் ரத்தினா' விருதும் வழங்கப்படவுள்ளது.

இவ் விருதுகளைப்பெற்றுக் கொள்ளக் கூடிய கலை ஞர்களின் விபரங்களை அந்தப் பகுதி யில் உள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் இம் மாதம் 30ஆம் திகதிக்கு முன் செயலாளர், கலாசாரப் பேரவை, யாழ். பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஓ)



நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க இலண்டன் கிளை வித்தியாலத்திற்கு சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளது. இப் பொருட்கள் கையளிப்பு விழாவிற்கு அதிபர் எஸ்.சேதுராஜா தலைமை தாங்கி உரையாற்றுவதையும், பழைய மாணவர் சங்கத்தலைவர் ஆர்.ஐயாத்துரை (இளைப்பாறிய அரசாங்க அதிபர்) விளையாட்டுப் பொருட்களை வித்தியாலய விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ஆர்.இராஜசீலனிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படம்:-பரு.நிருபர்)

## கலாசாரப் பேரவை நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவு கலாசாரப் பேரவையின் அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ்.பிரதேச செயலர் ம.மரியதாசன் ஜெகூ தலைமையில கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது. பின்வருவோர்கள் நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். தலைவராக ம.மரியதாசன் ஜெகூ (பிரதேச செயலர், யாழ்ப்பாணம்). உப தலைவராக இரா.செல்வவடிவேல் (ஆசிரியர்). இணைச் செயலாளர்கள் கி.கந்தவேள், திருமதி மேரியுப்பிலோசியா- எல்சோர், தனாதிகாரி தி.தவபாக்கியராசா, கலாசாரப் பேரவையின் செயற்பாட்டாளராக சி.எம்.நெல்சன் மற்றும் 22 பேர்கள் கொண்ட நிர்வாக சபை ஒன்று ம் தெரிவுசெய்ப்பட்டுள்ளது. (ஓ)

## ஆறாவது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலை 6ஆவது ஆண்டு நிறைவிழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையில் சிவஸ்ரீ கு. தியாகராசக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வித்யாபூசணம் பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) கலந்துகொள்ளவுள்ளார். ஆசியுரையை அரசகேசரிப் பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ சா.சோமதேவக் குருக்கள் வழங்கவுள்ளார்.

விழாவில், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய பண்ணிசை ஆசிரியர் ந. ஸ்ரீராம் குமார், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களான செல்வி செ.சிவாஜினி, செல்வி த.தர்சிகா ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஓ-7)

## திருமுறைத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் வைகாசி, ஆடி மாதங்களில் பூரணைத் தினத்தில் ஞானநூல்களுக்கு விசேட சோடசோபசார பூசை செய்து திருமுறைத் திருவிழா செய்வது வழக்கம்.

அந்த வகையில் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை வைகாசி மாத பூரணைத் தினத்தில் காலை 8 மணிமுதல் யாழ்ப்பாணம் கந்தர்மடம் பலாலிவீதி, இந்து சமயப் பேரவை ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலில் இந்துசமயப் பேரவையின் அனுசரணையுடன் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நாயன்மார் நால்வருக்கு விசேட அபிஷேகம், வழிபாடு, சோடசோபசார பூஜை,அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன நடைபெறும். (ஓ)

## சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்ற பொதுக்கூட்டம்

(அல்வாய்)

பருத்துத்துறை பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்ற பொதுக்கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை பி.ப 2.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் புகைத்தல் எதிர்ப்பு கொடி வாரம் பற்றிய ஆலோசனை, மாதாந்தம் புலமைப்பரிசில் பெறுவோரின் தற்போதைய நிலை, சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்திற்கு கிடைத்த கடிதங்கள், எதிர்காலத்தில் மன்றத்தின் நிதிப் பயன்பாடு ஆகிய விடயங்கள் பற்றிய ஆய்வுகள் நடைபெற்று சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்ற தலைவரும் பிரதேச செயலருமான இ.வரதீஸ்வரன் தலைமையில் தீர்மானங்கள் எடுக்கப்படும். (ஓ-19)

## செபக்கூடம் திறப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புனித -மரியாள் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள புனித மரியாள் வழிபாட்டு செபக்கூடம் (கெபி) நாளை ஞாயிற்றுக்கிழமை திருப்பலியின் பின்பு திறந்து வைக்கப்படவுள்ளது. (அ-72)

# மடு தேவாலயத்தை நிர்வாகத்திடம் கையளிக்க இராணுவத்தினர் இணக்கம்

(கொழும்பு)

மடுமாதா தேவாலயப் பகுதியில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணி வெடிகளை 6-8 வாரங்களில் அகற்றி மடு தேவாலயத்தை அதன் நிர்வாகத்திடம் கையளிப்பதற்கு இராணுவத்தினர் இணங்கியிருப்பதாக மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் விக்டர் சோசை அடிகளார் தெரிவித்தார்.

மடு தேவாலயத்தில் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் மற்றும் குரு முதல்வர் விக்டர் சோசை ஆகியோர் இராணுவ உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர்.

மடு தேவாலயப் பகுதியில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை அகற்றி அந்தப் பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு 6-8 வாரங்கள் தேவை எனத் தெரிவித்திருக்கும் இராணுவத்தினர், கண்ணிவெடிகளை அகற்றி அந்தப் பகுதியில் திருத்தங்களை மேற்கொண்ட பின்னர், மடு தேவாலயத்தை தம்மிடம் கையளிப்பதற்கு இணங்கியிருப்பதாக குரு முதல்வர் விக்டர் சோசை அடிகளார் ஐ.என்.எல்.லங்கா இணையத்தளத்திடம் தெரிவித்தார்.

மடு தேவாலயத்தை சூழவுள்ள 2.5 கிலோ மீற்றர் பகுதி புனித பிரதேசமாக மதிக்கப்பட வேண்டும் என்பதை இராணுவத்தினர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு நிர்வாகத்தை எம்மிடம் வழங்கி விட்டு பின்னர் அங்கிருந்து 2.5 கிலோ மீற்றர் பின்னோக்கிச் செல்லத் தயார் என அவர்கள் எம்மிடம் கூறியிருந்தனர் என்றார் விக்டர் சோசை அடிகளார்.

மடு தேவாலயத்துக்குள் குருக்களை அனுப்புவது குறித்து நாங்கள் இராணுவத்தினரிடம் கலந்துரையாடி இருந்தோம்.

எனினும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர்களையும் அனுமதிக்க முடியும் என இராணுவத்தினர் தெரிவித்திருந்தனர்.


மடு தேவாலயத்திற்கு குருக்கள் அனுப்பப்பட்டு தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த வேலைகளை மேற்கொண்டாலே மடு மாதாவின் திருச் சொரூபத்தை மீண்டும் ஆலயத்துக்கு கொண்டுவர முடியும் என மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் விக்டர் சோசை அடிகளார் மேலும் தெரிவித்தார். (ச-5)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(நல்லூர்)

உலக பண்பாட்டு தினத்தை முன்னிட்டு சேவாலங்காவின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகம் நடாத்தும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 23ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் சிறுவர் உளவியல் மேம்பாடும், தமிழர் பண்பாட்டு சிறப்புகளும் வளமான வாழ்வும் என்ற தலைப்பில் நடைபெறும். ஆர்வலர்கள் இதில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-3.4)



உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு உசன் ஐக்கிய நாணய சங்கம் நடத்திய பாராட்டு விழாவில் உசன் கந்தசாமி கோயில் அறங்காவலர் கு.விமலதாஸ் உரையாற்றுவதையும் சங்கத் தலைவர் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பேரம்பலம், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான வரதராசமூர்த்தி, முத்துலிங்கம், பாடசாலை அதிபர் எஸ். மனோகரன், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி க.நல்லதம்பி, கிராம அலுவலர் திருமதி சு.செல்வவிநாயகம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களாக பதவியேற்க முஸ்லிம் காங்கிரஸ் முடிவு

(கொழும்பு)

நாடாளுமன்ற பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூன்று உறுப்பினர்களும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களாகப் பதவியேற்கவுள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், பொதுச் செயலாளர் ஹசன் அலி மற்றும் தவிசாளர் பஷீர் சேகுதாவுத் ஆகியோர் தமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிகளை இராஜினாமாச் செய்துவிட்டு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டிருந்தனர்.

இவர்கள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களாகப் பதவியேற்க விருப்பதுடன் நாடாளுமன்றத்திற்கு திரும்புவது தொடர்பாக பின்னர் தீர்மானிக்கப்படுமென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பஷீர் சேகுதாவுத் கூறியுள்ளார்.

மாகாணசபை உறுப்பினர்களாக பதவியேற்ற பின்னர் நாடாளுமன்றம் திரும்புவதா இல்லையா என்பது பற்றி கட்சி கூடி ஆராயும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கிழக்கு மாகாண சபை தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை உறுப்பினர்களின் பெயர்களை தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம் நேற்று முன்தினம் வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளது. (ச-5)

## ஊழியர் சேமலாபநிதி இலக்கத்தை மாற்றும் நடவடிக்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதி அங்கத்துவ இலக்கத்தை தேசிய அடையாள அட்டை இலக்கத்துக்கு மாற்றும் வேலைத்திட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்போது ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்களின் கணக்கு இலக்கமானது வேலை செய்யும் நிறுவனத்தின் இலக்கம், மாவட்டத்தைக் குறிக்கும் ஆங்கில எழுத்து மற்றும் ஊழியரின் இலக்கம் என்பவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகிறது.

இக்கணக்கிலக்க முறையானது ஊழியர்கள் வேறு நிறுவனங்களுக்கு மாறும் சந்தர்ப்பத்திலும் ஊழியர் சேமலாப நிதியினை மீளப் பெறும்போது சிக்கல் நிலை ஏற்படுகிறது. இக் குறைபாடுகளை தவிர்க்கும் முகமாக தே.அ.அ இலக்கத்தை ஊழியர் சேமலாப நிதி கணக்கு இலக்கமாக மாற்றும் வேலைத்திட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ்.மாவட்ட தொழில் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே ஊழியர் சேமலாப நிதியினை செலுத்துகின்ற நிறுவனங்களின் தலைவர் அல்லது அவரின் பிரதிநிதி 22ஆம் 23ஆம் திகதிகளில் அலுவலகத்திற்கு வருகை தந்து தங்களுக்குரிய படிவங்களைப் பெற்று தொழில் திணைக்கள உத்தியோகத்தர்களின் ஆலோசனைகளுடன் தமது நிறுவனத்தின் கீழ் பணியாற்றும் ஊழியர்களின் விபரங்களை வழங்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்து 30ஆம் திகதிக்கு முன்பதாக அலுவலகத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு உதவித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

## வாகனம் செலுத்தும்போது தொலைபேசி கதைக்கத் தடை

(கொழும்பு)

மோட்டார் சைக்கிள்களில் செல்லும்போது தலைக்கவசங்களுக்குள் மறைத்து வைத்து கையடக்க தொலைபேசிகளைப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென போக்குவரத்துப பிரிவு பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

எந்தவொரு வாகனத்தை செலுத்தும் போதும் தொலைபேசியில் உரையாடிக் கொண்டு செல்வது போக்குவரத்துச் சட்டத்தை மீறும் செயல் எனத் தெரிவிக்கும் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்கி பீரிஸ், அவ்வாறு சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக தண்டனை வழங்கப்படும் எனக் கூறியுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் செல்பவர்களுக்கும் இந்தத் தண்டனை ஏற்புடையது என அவர் கூறியுள்ளார். கையடக்க தொலைபேசிகளில் பேசிக் கொண்டு வாகனங்களை செலுத்துவதால் கவனம் திசை மாறிச் செல்லும்.

இதனால் வாகனத்தைச் செலுத்துபவர்களுக்கோ அல்லது வாகனத்தில் செல்லும் ஏனையவர்களுக்கோ ஆபத்துஉள்ளது என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**சின்னத்துரை முரளி**

(சுவிஸ்)



அன்பின் பிறப்பிடமான எனது
அருமைக் கணவரே!
பாசத்தின் உறைவிடமான சகோதரரே!
பண்பின் திருவுருவான எமது மைத்துனரே!
மாண்பு மிக்க எங்கள் மருமகனே!
அரவணைப்பும் இன்முகமும் நிறைந்த
எங்கள் பெரியப்பாவே!
சிறப்பு மிக்க எங்கள் சித்தப்பாவே!
ஆருயிர் நண்பனே!
உடலளவில் நீங்கள் எங்களை
விட்டுப் பிரிந்து ஆண்டு இரண்டு ஆனதே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றென்றும் பிரார்த்திப்போமாக!

'லக்ஷ்மி வாசம்'
நீராவி மத்தி, நீராவி.

—குடும்பத்தினர்.

(1188)


## நாடகமும் அரங்கியலுக்குமான கருத்தாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நாடகமும் அரங்கியலுக்குமான கருத்தாடல் நிகழ்வு யாழ். மத்திய கல்லூரி கலை மாணவர் மன்றத்தினால் 19ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நிகழ்த்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் கலாநிதி குழந்தை மா.சண்முகலிங்கம் கிரேக்க நாடக ஆசிரியரான 'சோபேக்கிளிசின் அன்ரிகனி' எனும் நாடக எழுத்துரு பற்றிய கருத்தாடலை நிகழ்த்தவுள்ளார்.

க.பொ.த உயர்தர வகுப்பிற்கான பாட அலகு என்பதால் நாடகமும் அரங்கியலும் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்து பயன் பெறுமாறு யாழ்.மத்திய கல்லூரி அதிபர் செ.பத்மநாதன் கேட்டுக்கொண்டுள்ளார். (ச)

## கொக்குவில் மேற்கிலுள்ள ஆறு வீடுகளில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு இராமுப்பிள்ளை ஒழுங்கையிலுள்ள ஆறு வீடுகளில் நேற்று முன்தினமிரவு கொள்ளை இடம்பெற்றுள்ளது. ஆறு வீடுகளிலும் நீர் இறைக்கும் மோட்டாரே கொள்ளை இடப்பட்டுள்ளது.

ஒரு வீட்டில் மோட்டாருடன் இரண்டு சைக்கிள்களும் களவு போயுள்ளதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

ஊரடங்கு நேரத்தை பயன்படுத்தியே இத்திருட்டு சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதலில் பாகிஸ்தான் கிராமமொன்றில் 12 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் பழங்குடி இன மக்கள் வசிக்கும் பிரதேசத்தில் 2 வீடுகள் மீது அமெரிக்க ஏவுகணைகள் தாக்கியதில் 3 குழந்தைகள் உட்பட 12 பேர் பலியானார்கள்.

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லைப் புறத்தில் பழங்குடி இன மக்கள் வசிக்கும் பஜாவர் பிரதேசம் தீவிரவாதிகள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி ஆகும். இங்கு உள்ள டமடோலா என்ற கிராமத்துக்கு அருகில் உள்ள 2 வீடுகளின் மீது அமெரிக்க ஏவுகணைகள் வீசப்பட்டன.

ஆள் இல்லாத விமானத்தில் இருந்து இந்த ஏவுகணைகள் வீசப்பட்டன.

ஏவுகணைகள் தாக்கியதில், ஒரு வீடு இடிந்து விழுந்ததில் 3 குழந்தைகள் மற்றும் ஒரு பெண் உட்பட 8 பேர் பலியானார்கள். இன்னொரு வீட்டில் இருந்த 4 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

தலீபான் செய்தி தொடர்பாளர் மவுல்வி ஓமர் கூறுகையில், அந்த வீடுகள்,பஷ்டுன் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு சொந்தமானவை. அந்த வீடுகளின் மீது இரவு 8மணி அளவில் ஏவுகணைகள் வீசப்பட்டன. இதில் வீடுகளில் இருந்த 8 தலீபான் தீவிரவாதிகளும், 3 சிறுவர்களும் ஒரு பெண்ணும் கொல்லப்பட்டனர். 6 பேர் காயம் அடைந்தனர்.பலியான அனைவரும் பாகிஸ்தானியர்கள் என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், அரசாங்கத்துடன் தலீபான்கள் நடத்தி வரும் பேச்சு வார்த்தையை இந்தத் தாக்குதல் பாதிக்காது என்ற போதிலும் இந்தத் தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

**கிராமத்துக்கு விரைந்த அதிகாரிகளை திருப்பி அனுப்பினர் மக்கள்**

இந்தத் தாக்குதலை அமெரிக்கா அல்லது பாகிஸ்தான் அதிகாரிகள் அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்த மறுத்துவிட்டனர். இறையாண்மை மிக்க ஒரு நாட்டின் மீது இன்னொரு நாட்டின் இராணுவம் தாக்குதல் நடத்துவது அந்த நாட்டின் இறையாண்மையை மீறிய செயல் ஆகும்.

புதிய அரசாங்கம் பதவி ஏற்ற பிறகு அந்த நாட்டின் மீது அமெரிக்க ஏவு கணைத் தாக்குதல் நடத்தப்படுவது இது தான் முதல் முறை ஆகும்.

இந்த சம்பவம் பற்றி கேள்விப்பட்டதும், பாகிஸ்தான் அதிகாரிகள் அந்தக் கிராமத்துக்கு விரைந்து சென்றனர். அவர்களை ஊருக்குள் நுழையவிடாமல் கிராம மக்கள் தடுத்தனர்.அவர்களை திருப்பி அனுப்பி விட்டனர். கிராம மக்கள் ஆத்திரம் அடைந்து உள்ளனர். (அ-5)

## உலக தரிசனம்


## இளம் நட்சத்திரத்தின் வெடிப்பு விஞ்ஞானிகளால் அவதானிப்பு

அண்டவெளியில் 140 வருட இளம் நட்சத்திரமொன்று வெடித்துச் சிதறும் நிகழ்வை அவதானித்ததாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதுவரை அவதானிக்கப்பட்ட நட்சத்திர வெடிப்பு சம்பவங்களில் மிகவும் இளைய நட்சத்திரமொன்றின் வெடிப்பாக இது கருதப்படுகிறது. இந்த நிகழ்வானது நியூ மெக்ஸிகோவிலுள்ள வானொலி சமிக்ஞை அவதான நிலையம் மற்றும் விண்வெளியில் வலம் வரும் நாசாவின் சந்திரா எக்ஸ்ரே அவதான நிலையம் என்பவற்றின் மூலம் அவதானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நட்சத்திர வெடிப்பு 1868 ஆண்டளவில் நிகழ்ந்திருக்கலாம் எனவும் அதன் ஒளி தற்போதே பூமியை வந்தடைந்துள்ளதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (அ-5)

## பறக்கும் மனிதன்



(பெக்ஸ்)

வானில் பறந்தபடி செல்லும் இவர் யுவெஸ் ரோஸி. ஸ்விட்சர்லாந்து இராணுவத்தில் பைலட்டாக பணியாற்றி ஓய்வுபெற்றவர். வானில் பறந்து செல்வது குறித்து ஆய்வு செய்துவந்தார்.

5ஆண்டு ஆராய்ச்சிக்குப் பின் 4எஞ்சின்கள் பொருத்தப்பட்ட அதிநவீன சிறகுகளை உருவாக்கினார் ரோஸி.சோதனை செய்து பார்க்க 8,200 அடி உயரத்தில் விமானத்திலிருந்து குதித்தார்.

வானில் மிதந்ததும் முதுகில் இருந்த இன்ஜின்களை இயக்கி வானில் பறக்கத் தொடங்கினார். நிமிடத்துக்கு 300 கி.மீ. வேகம் வரை பறந்தார். இதற்காக செலவு செய்த தொகை ரூ1.25 கோடி. (அ-5)

# பூமி அதிர்ச்சியால் மாணவர்கள் கொல்லப்பட்டமைக்கு பாடசாலைக் கட்டடங்களின் தரம் காரணமா?

## வீடமைப்பு நகர மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு விசாரணைக்கு உத்தரவு

(பீஜிங்)

சீனாவில் இடம்பெற்ற பூகம்பத்தில் பல்வேறு கட்டடங்கள் இடியாமல் இருக்கின்ற போதும் பல பாடசாலைக் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் கொல்லப்பட்டமை குறித்து பரவலான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை சீனாவின் தென் மேற்கு மாகாணமான சிச்சுவான் மாகாணத்தில் 7.9 ரிச்டர் அளவில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியால் 40 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் .

"பாடசாலைக் கட்டடங்களின் தரம் தொடர்பாக பிரச்சினை ஏதும் இருப்பின் அது குறித்து உரியவர்கள் பொறுப்புக் கூற வேண்டும் என்பதுடன், எந்தவிதமான பாகுபாடுமின்றி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.பொதுமக்களின் பாதுகாப்புக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டும்" என சீன கல்வி அமைச்சின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் திணைக்களப் பணிப்பாளர் ஹான் ஜன்னை மேற்கோள் காட்டி சீன செய்திச் சேவையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சீனாவின் வீடமைப்பு மற்றும் கிராம அபிவிருத்தித் திட்ட ,அமைச்சு விசாரணைகளை நடத்துமாறு உள்ளூர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

சிச்சுவான் மாகாணத்தில் பூமியதிர்ச்சி ஏற்பட்டபோது பாதுகாப்புக்காக பாடசாலை மாணவர்கள் நிலத்தில் படுக்கவைக்கப்பட்டுள்ளனர். இதன்போது கட்டடங்கள் இடிந்து வீழ்ந்ததாலேயே பாரிய சேதம் ஏற்பட்டிருந்ததாக சீனத் தகவல்கள் கூறுகின்றன.(ஓ-5)

# 'பார்சலை' உடைத்து வெளியேறியது பாம்பு ஜெர்மன் தபாலகத்தில் பரபரப்பு



(பெர்லின்)

மூன்று மலைப் பாம்புகளைப் 'பார்சலாக' கட்டி, அதை தபாலில் அனுப்ப முற்பட்டது. ஜெர்மன் தபால் நிலையத்தில் பெரும் பீதியை உருவாக்கியது. இது தொடர்பாக பொலிஸார் கூறியதாவது,

ஜெர்மனியில் உள்ள முக்கிய நகரங்களில் ஒன்று டாம்ஸ்டேட். இங்குள்ள தபால் நிலையத்தில், கிழக்கு ஜெர்மனிக்கு அனுப்பும்படி பார்சல் ஒன்று சமர்பிக்கப்பட்டது.

அதை அனுப்புவதற்காக தபால் ஊழியர்கள் வைத்திருந்தபோது, அந்த பார்சலை உடைத்துக்கொண்டு, பாம்பு ஒன்று தலையை நீட்டியது.அதைப் பார்த்த தபால் அலுவலக ஊழியர், அலறி அடித்து ஓடி, உடனடியாக உயர் அதிகாரிகளிடம் கூறினார். பார்சலை முழுமையாக உடைத்துப் பார்த்தபோது, அதில் டைகர் ரக மலைப்பாம்பு இரண்டும், அல்பினோ டைகர் ரக மலைப் பாம்பு ஒன்றும் இருந்தது. மலைப் பாம்புகளை தபாலில் அனுப்ப முற்பட்ட நபர் குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (அ-5)

# மியான்மர் அரசியல் சட்டத்துக்கு 92சதவீதம் பேர் ஆதரவு

(யாங்கூன்)

மியான்மர் நாட்டு இராணுவத்தின் ஆதரவு பெற்ற அரசியல் சட்டத்தின் மீது வாக்கெடுப்பு நடந்தது. நர்கீஸ் புயலால் தேசிய அளவில் பெரும் சேதம் ஏற்பட்டு நிவாரணப் பணிகளை செய்ய வேண்டிய நிலையில் இருந்த அரசாங்கம் இந்த வாக்கெடுப்பபை தள்ளி வைக்காமல் அதை மக்கள் துயரப்பட்டு நிற்கும் நிலையில் நடத்தியது.

கடந்த 10ஆம்திகதி நடத்தப்பட்ட இந்த வாக்கெடுப்பில் மொத்தம் உள்ள 2 கோடியே 25இலட்சம் வாக்காளர்களில் 90 சதவீதம் பேர் வாக்களித்தனர்.

வாக்களித்தவர்களில் 92.4 சதவீதம் பேர் புதிய அரசியல் சட்டத் துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

2010ஆம் ஆண்டு ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்துவதையொட்டி எடுத்து வைக்கப்பட்ட முதல் அடி ஆகும் என்று இராணுவ ஆட்சியாளர்கள் தெரிவித்தனர். (அ-5)

# குவைத் பாராளுமன்றத் தேர்தலில் 27 பெண்கள் போட்டியிடுகின்றனர்

(குவைத்)

குவைத் நாட்டில் பாராளுமன்றத்துக்கு இன்று தேர்தல் நடக்கிறது. 50 உறுப்பினர்கள் கொண்ட இந்த சபைக்கு கடந்த 2006 ஆம் ஆண்டு முதன் முதலாக பெண்கள் போட்டியிட்டனர். ஆனால் ஒருவர் கூட வெற்றிபெற வில்லை.

இதைத் தொடர்ந்து 2 பெண்கள் மந்திரிகளாக நியமிக்கப்பட்டனர். இப்போது மீண்டும் தேர்தல் நடக்கிறது.

இதில் 246 ஆண்களும் அவர்களை எதிர்த்து 27 பெண்களும் போட்டியிடுகிறார்கள்.அவர்களில் முக்கியமானவர் ரோலா தஷ்டி குறிப்பிடத்தக்கவர். இவர் 40களின் மத்தியில் இருக்கிறார். ஒரு பொருளாதார நிபுணர் ஆவார். 2006 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் பெண்களிலேயே அதிக எண்ணிக்கையில் ஓட்டுக்கள் பெற்றார். (அ-5)

# ஆர்டிக் கடலில் அபரிமிதமான எரிவாயு வளம் ரஷ்ய அறிவியல் அகடமியின் ஆய்வில் தெரிவிப்பு

(மாஸ்கோ)

ஆர்டிக் கடலில் இயற்கையின் ரகசிய புதையல் புதைந்து கிடக்கிறது. இந்த கடலில் இயற்கை வாயு, எண்ணெய் வளம் அபரிமிதமாக உள்ளது. பூமியின் தரைப் பகுதியில் இருந்து கிடைப்பதை விட,அதிகமாக இங்கு இயற்கை எரிவாயு, எண்ணெய் வளம் இருக்கிறது. ரஷ்ய அறிவியல் அகடமி சார்பில், கடந்தாண்டு ஒக்ரோபர் மாதம் காரா கடலில், நடத்தப்பட்ட நீண்ட ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டது.

ரஷ்ய அறிவியல் அகடமியைச் சேர்ந்த கடலியல் கழகத்தின் துணை இயக்குநர் மிகைல் பிளின்ட தலைமையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

உலகம் வெப்ப மயமாதலாலும் நதிகள் நேரடியாக கடலுள் கலப்பதாலும் கடந்த ஆண்டில் உறைநீர் மூடிய பகுதி 15 இலட்சம் சதுர கி.மீ. ஆக குறைந்துள்ளது. உறைபனி நீர் உருகுவதால், கடலில் புதிய வழித் தடங்கள் ஏற்படும் வாய்ப்பும் உருவாகியுள்ளது.

ஆர்டிக்கில் கிழக்குப் பகுதியில் உள்ள பல



அடுக்கு நீர், பெருமளவு ஹைட்ரோ கார்பன் கொண்டுள்ளது.

பூமியின் தரைப் பகுதி முழுவதிலும் கிடைப்பதை விட, இங்கு அதிகளவில் எரிவாயு வளம் இருக்கிறது. ஆர்டிக்கில் குறைந்த ஆழமுள்ள கடற்படுகைகள் 30 சதவீதம். இதில் 70 சதவீதம் ரஷ்யாவிடம் உள்ளது. ஆனால். இவற்றை எடுப்பது மிகவும் கடினமானது. புதிய தொழில்நுட்பம், பெரும் சிரமம், அதிக முதலீடு தேவைப்படுகிறது. (அ-5)

# கத்தரியில் காய்தண்டு துளைப்பான் கட்டுப்பாடு

எங்கட பெருமாள் பாருங்கோ ஒரு திறமான கமக்காரன். அதோட ஒரு சமூக அக்கறையுள்ள ஆளும் தான். விவசாயத்தில் புதுப்புது விசயங்களை பாவிச்சு உற்பத்தியை கூட்டவேணும் என்ற சிந்தனையுள்ள மனிசன். ஆள் இருந்திட்டு என்னட்ட ஏதும் ஒரு சிக்கலோட தான் வரும் பிறகு என்னை ஆரெண்டு தெரியுமே? நான், நான்தான்.

அண்டைக்கும் ஆள் உப்பிடித்தான் வந்து இஞ்சேரும் தம்பி கிருமிநாசினியள அளவு கணக்கில்லாம விசிறுதாலதான் எல்லோருக்கும் வருத்தம் வருகுதெண்டு பேப்பரிலை போட்டிருக்கிறாங்கள். ஆனால் நான் வச்சிருக்கிற கத்தரிக்கு கிழமைக்கொருக்கால் மருந்து அடிக்காட்டி என்ன நடக்கும். நான் கடனாளி ஆக வேண்டியதுதான் காய்தண்டு துளைப்பானால என்றார்.



புழுவின் தோற்றம்

ஆள் ஒரு முடிவோடதான் வந்திருக்கிறது எனவே எனது வித்துவத்தைக் காட்ட நல்ல வாய்ப்பு நழுவவிடாமல் பயன்படுத்திக் கொண்டேன்.

"அண்ண உந்த காய் தண்டு துளைப் பானை லூசினோடெஸ் ஓபனாலிஸ் (Leusi nodes orbanalis) எண்டு தான் விஞ்ஞானி கள் கூப்பிடுவினம்"

"அது சரி தம்பி உந்த புழு எப்பிடி வருகுது"

"அண்ண இது ஒரு அந்துப் பூச்சியொண்டின்ர முட்டையில இருந்துதான் வருகுது. அந்துப் பூச்சியை சாதாரணமாக நீங்கள் கண்ணால கண்டிருக்க மாட்டியள் ஏணென்டா இரவில் தான் இது வெளிக்கிட்டு திரியும். மங்கிய வெள்ளை நிற முன் சிறகில கபிலநிற வரியள் அல்லது புள்ளிகள் இருக்கிற நடுத்தர அளவான பூச்சி.

"அப்ப உது எங்க முட்டையிடுகுது"

இரவில அரும்புகளிலையும் பிஞ்சுகளிலையும் அல்லது புல்லிகளிலையும் 10-70 வரையான முட்டைகளை இடும். பிறகு முட்டைகள் 3-5 நாட்களில் பொரித்து குடம்பி எண்டு சொல்லுகிற றோஸ்நிறமான புழுக் கள் வெளிவரும். இவை மென்மை யானதண்டுஅல்



அந்துப்பூச்சியின் தோற்றம்

லது காய்களைதுளை த்து உட்புகுந்து அவற்றினுள் வளரும் 15-20 நாட்களின் பின் அவற்றிலிருந்துவெளிக்கிட்டு காய்ந்த இலைச் சருகுகளுக்குள்ள கூட்டுப் புழுவாக மாறும். கூட்டுப் புழுவில இருந்து அந்துப் பூச்சி வெளிவரும்.

"எடதம்பி இதில இவ்வளவு விசயம் இருக்கெண்டு எனக்கு இண்டைக்குத்தான் தெரியும் என்று அதிசயப்பட்டார் பெருமாள். உங்களுக்கு மட்டுமில்லை கனபேருக்கு இதுகள் தெரியாது அதாலதான் கண்டபாட்டுக்கு மருந்தை அள்ளி விசிறினம். மருந்தை விட சுலபமாக கட்டுப்படுத்துகிற வேற முறை யள் இருக்கு எல்லாத்தையும் சொல்லுறன் கேளுங்கோ.

இப்ப பாருங்கோ இந்தப் புழுக்கள் காய்க்குள்ளயும் தண்டுகளுக்குள்ளயும் இருக்கு. ஆதலால் இதுக்கு தொடுகைப்பூச்சி நாசினிகளை (Contact insecticide) அடிச்சு பயனில்லை. எனவே தாவரத்தால உறிஞ்சப்பட்டு தாவர உடல் முழுவதும் பரவக்கூடிய தொகுதிப் பூச்சிநாசினிகளை (Systemic insecticide) அடிக்க வேணும்.

"ஐயோ கடவுளே நான் இவ்வளவு நாளும் கடையில தாற மருந்தை அடிச்சுப் போட்டு மருந்து சரியில்லை எண்டு கலவை யைக் கூட்டி எல்லே அடிக்கிறனான்" பெரு மாளின் குரல் ஏமாற்றத்துடனும் குற்றவுணர்வுடனும் ஒலித்தது.

"சரி இனிமேல் அப்பிடி செய்யாம அதுக்கெண்டு இருக்கிற விவசாய விரிவாக்கல் பிரிவு ஆக்கள கேட்டு மருந்தடிக்க வேணும். அது போக மிச்சத்தையும் சொல்லுறன் கேளுங்கோ" இந்த மாதிரியான மருந்துகள் கொஞ்ச நாளையால செறிவு குறைஞ்சு பூச்சிகளை கொல்லாது விடும்.

ஆனா நாங்கள் சாப்பிடச் சாப்பிட சேர்ந்து வருத்தத்தைக் கொண்டு வருகுது. இந்த சிக்கல்களை தவிர்க்கிறதுக்கு வேற சுலபமான முறையள் இருக்கு அவை என்னெண்டு பாப்பம்.

1.புழுக்குத்தி வாடின அரும்புகள், பிஞ்சுகள் எல்லாத்தையும் பிடுங்கி எரித்தல்.

2. ஒரே இடத்தில் திரும்பத் திரும்ப கத்தரி பயிரிடுவதை தவிர்த்தல்.

3. கத்திரி நாற்று நடும் பொழுது ஒவ்வொரு குழியிலும் 5கிராம் காபோபுயு ரான் குறுனல் இடுதல்.

4. கத்தரிக்கு கீழுள்ள காய்ந்த சருகுகளைச் சேகரித்து எரித்தல்.

5. அந்துப் பூச்சிகள் ஒளியால் கவரப்படக் கூடியவை. எனவே ஏதாவது ஒரு விளக்கை தடியில் கட்டி அதன் கீழ் நஞ்சு நீர் (20 கிராம் காபோபுயுரானனை 3லீற்றர் நீரில் கரைக்க) வைக்கும்போது பூச்சிகள் அதனுள் வீழ்ந்து இறக்கும்.



காய் தண்டு துளைப்பானால் பாதிக்கப்பட்ட கத்தரிக்காய்

6. கத்தரியின் காலம் முடிவடைந்த பின் அதை அப்படியே விடாது பிடுங்கி எரித்தல்.

7. இதுகள் எல்லாத்துக்கும் மேலால எல்லா விவசாயிகளின்ர ஒத்துழைப்புத்தான் மிக முக்கியம் ஏனென்டா ஒருவர் தன்னும் கத்தரிக்காயை அப்படியே விட அதில பூச்சி பெருகி எல்லாற்றை கத்தரிக்கும் பரவும்.

இப்படியான முறைகளை பாவிச்சால் இலாபமும் கூடும்.

சனத்துக்கும் சிக்கலில் லை என்று ஒரு குட்டிப் பிரசங்கத்தையே நடத்தி முடித்துவிட்டேன்.

"சரி இண்டைக்கு உம்மோட கதைச்சதால இவ்வளவு விசயமும் தெரிஞ்சுது போட்டு வாறன்" என்றார் பெருமாள்.

மனிசன் நாளைக்கும் ஏதோ ஒரு சிக்கலோட தான்வரும்.

ந.திலீபன்
(விவசாய உயிரியல் சிறப்பு மணவன்)
விவசாய பீடம்

# சதாபொன்ஸ் கல்வி மேம்பாட்டு நிதிய இரண்டாம் ஆண்டு நிறைவு விழா

(பருத்தித்துறை)

அல்வாய் சதாபொன்ஸ் கல்வி மேம்பாட்டு நிதியத்தின 2ஆம்ஆண்டு நிறைவு விழாவும் வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி உதவி வழங்கும் வைபவமும் இம்மாதம் 19 ஆம்திகதி திங்கட் கிழமை நிதியத்தலைவர் வர்த்தகர் எம்.சுந்தரலிங்கம் (ஜே.பி) தலைமையில் நடைபெறவுள்ளது. பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் விழாவிலே பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி ஆசிரியர் ஜே. சந்திரப்பிரகாசன் நெல்லியடி இலங்கை வங்கி உதவி முகாமையாளர் எஸ்.ஸ்ரீகாந்தன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொள்வார்கள்.

வறுமைக்கோட்டின் கீழ்வாழும் க.பொ.த. (உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் 5 மாணவர்களுக்கு கல்வி அபிவிருத்தி நிதி உதவியும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் 20 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும், பல்கலைக் கழக த்திற்குத் தெரிவான மாணவரொருவருக்கு பல்கலைக்கழகக் கல்வி அபிவிருத்தி நிதியும்(10, 000 ரூபா) வழங்கப்படவுள்ளன. அத்தோடு வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் யுவதி ஒருவருக்குச் சுயதொழில் முயற்சிக்கான தையல்மெசின் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் சதா பொன்ஸ்கல்வி சமூக மேம்பாட்டு நிதியத்தால் வறுமைக் கோட்டிற்கு கீழ்வாழ்கின்ற 45 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்களையும் 2 மாணவர்களுக்கு கல்வி அபிவிருத்தி நிதி உதவியும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-52)

## செயலமர்வு

கணனி பொருத்துதலும் வன்பொருள் பராமரிப்பும் என்ற விடயம் பற்றி 19ஆம் திகதி காலை 8.30மணிக்கு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் கணனி வள நிலையத்தில் செயலமர்வு நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் ஒவ்வொரு பாடசாலையிலும் தரம் 10, 11, 12 ஆகிய வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களிலிருந்து கணனிக்குப் பொறுப்பான ஆசிரியர் ஒருவர் மட்டும் பங்குகொள்ளுமாறும் வரும்போது தரம் 11 செயற்திட்ட முன்னேற்ற அறிக்கையையும் கொண்டுவரும்படியும் வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்துள்ளார். (ஓ-19)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் -இலங்கை
## முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்

### வணிகமாணி/ தொழில் நிர்வாகமாணி
### முதலாம் அரையாண்டு பரீட்சைகள் – 2007
### (புதிய, பழைய பாடத்திட்டம்)

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் முதலாம் அரையாண்டு பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் 21.05.2008 ஆம் திகதி முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மீள் பரீட்சைக்கு தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு ரூபா 50 பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கி கிளையில் செலுத்தி பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 30.05.2008 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

குறிப்பு: *முதலாம் வருடத்துக்கான தகவல் தொழில்நுட்ப மீள் பரீட்சைக்கும் விண்ணப்பம் கோரப்படுகின்றது.*

பதிவாளர்,
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம். (C/1119)



## யாழ்ப்பாணம் மாநகர சபை
### சந்தை, இறைச்சிக் கடைகள் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான
### மீள்கேள்வி அறிவித்தல் -2008

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி சந்தை, இறைச்சிக்கடைகள் 01.06.2008 ஆம் திகதி முதல்31.12.2008 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ். மாநகர சபையால் கோரப்படுகின்றது .

- கேள்விப்படிவக்கட்டணம் (வற் நீங்கலாகச்)ரூபா 400.00
- கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி 21. 05.2008 தொடக்கம்
- கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் 29.05.2008 நண்பகல் 12.00 மணிவரை
- கேள்வி திறத்தல் 29. 05. 2008 பி.ப 2.30 மணிக்கு

விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்திசெய்து கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிட்டு மாநகரசபை இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில்அனுப்புவோர் "மாநகர சபை ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற முகவரியிட்டு 29.05. 2008 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரார்கள் அல்லது அவர்கள் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம் .

குறிப்பு:-

1.சந்தையைக் குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியில் 3 வீதம் கட்டணத்தைப் பெறலாம். அல்லது வியாபாரிகள் வியாபாரம் செய்யும் இடத்திற்கு (கல்லுக்கு) ரூபா 40.00 பெறலாம் . மேலதிகமாக எந்தவித வரியும் அறவிடக்கூடாது.

2. சபையின் கடைகளில் இறைச்சி விற்பனைசெய்யும் உரிமையாளர்கள் மாத வாடகை செலுத்த வேண்டும்.

3. சபையின் கடைகள் இல்லாத இடமாகிய ஜின்னா வீதிக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர்கள் குறிப்பிட்ட இடங்களின் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதங்களையும் இணைத்தல்வேண்டும்.

4.கேள்விப் படிவக் கட்டணம்த கேள்வித்தொகைத மாதவாடகை என்பவற்றுக்கு 15% பெறுமதி சேர்வரி (வற்) செலுத்தல்வேண்டும்.

5.சித்திபெற்றவர்கள் உடனடியாக கேள்வித் தொகையின்1/3 பகுதியைச் செலுத்தி ஒப்பந்தத்தை சபையுடன் முடித்துக்கொள்ளவேண்டும்.மிகுதித்தொகையின் 1/4 பங்கை 2008 யூலை மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் 1ஆம் திகதிசெலுத்தவேண்டும்.

6. கேள்வி விண்ணப்பப் பத்திரங்கள் கோருபவர்கள் அடையாள அட்டையுடன் அதன் ஒளிப்படப் பிரதி ஒன்றைக் கொண்டு வருதல் வேண்டும்.

7.சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்.மாநகரசபை ஆணையாளராகிய எனக்கு இருக்கின்றது.

8. இறைச்சிக் கடை விண்ணப்பங்கள் பெறுபவர்கள் முன்பு மாநகரசபைக்கு எந்தவித் கொடுப்பனவும் செலுத்தமுடியாத காரணத்தினால் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

மேலும் மேலதிக விபரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் யாழ். மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

*மாநகர அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*

*மு.செ.சரவணபவ,*
*மாநகர ஆணையாளர்,*
*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*

| தொ. இல | பொதுச் சந்தை | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (15% பெறுமதி சேர்வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1. | பெரியகடை மரக்கறிச் சந்தை | 10000.00 | 438150.00 |
| 2. | இறைச்சிக் கடைகள் | | |
| | 1.குருநகர் மாட்டிறைச்சிக் கடை இல.07 | 7000.00 | 55470.00 |
| | 2.ஜின்னா வீதி ஆட்டிறைச்சிக் கடை | 5000.00 | 14296.00 |
| | 3.செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை இல:02 | 5000.00 | 78500.00 |

(C/1122)

# கிழக்குத் தேர்தலின் சதி நோக்கத்தை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும்

## "விடுதலைப் புலிகள்" ஏடு வேண்டுகோள்

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் தமிழர் தாயகத்தின் தென்பிரதேசமான கிழக்கில் நடத்தியுள்ள தேர்தலின் சதி நோக்கத்தை உலக நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகார வழி ஏடான "விடுதலைப்புலிகள்" ஏடு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி வெளிவந்த விடுதலைப் புலிகள் ஏட்டின் 141 ஆவது இதழின் ஆசிரியர் தலையங்கம்: இந்தத் தாயக பூமியில் தேசியத் தனித்துவத்துடன் வாழும் அரசியல் அபிலாஷையை இலக்கு வைத்தே தமிழரின் விடுதலைப் போராட்டம் நடைபெறுகின்றது.

இந்த விடுதலைப்போராட்டத்தின் அடிநாதமாகத் தமிழரின் தாயகக் கோட்பாடு உள்ளது. இந்தத் தாயகப் பூமியை சிதைத்து தமிழரின் தேசியத்தை கருவறுக்க இலங்கை அரசு விடாப்பிடியாக சதிகள் பல செய்து வருகின்றது.

தமிழினப் படுகொலைகள் என்ற நாசகாரத் திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்த அரசு தேர்ந்தெடுத்த முதல் இலக்குத் தமிழரின் தாயக நிலமாகும்.

இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரம்சிங்களவரின் கைகளிற்கு மாறிக் கொண்டிருந்த அந்தக் காலகட்டத்திலேயே தமிழர் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை அமைத்து நில அபகரிப்பைச் சிங்கள ஆட்சியாளர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அந்த நில அபகரிப்பு இன்று வரை தொடர்கிறது. கிழக்கு மாகாண நிலமே சிங்களப் பேரினவாதிகளின் பிரதான குறியிலக்காக உள்ளது. முதலில் கிழக்கு பின்னர் வடக்கு என்ற சிங்கள இனவாதிகளின் நில அபகரிப்புக் கோசம் பிரசித்தமானது.

கிழக்கு மாகாணம் என்று அழைக்கப் படும் தமிழர் தாய்கத்தின் தென்பகுதியில் விவசாயக்குடியேற்றங்கள் என்ற பெயரில் சிங்களவர்களைக் குடியமர்த்தி அப்பகுதியின் இன விகிதாசார நிலையைத் தலைதூக்கி இறுதியில் சிங்களவர் நிலமாகக் கிழக்கு மாகாணத்தை உருவாக்க அரசு எத்தனிக்கின்றது.

சிங்களக்குடியேற்றங்கள் மூலமானஇந்த நில அபகரிப்பு முயற்சி மண்பறிப்பு என்ற அம்சத்துடன் மட்டும் நின்று விடவில்லை. தமிழர்தாயகத்தின் நிலத் தொடர்ச்சியைத் துண்டாடி தமிழரின் தாயக்கக் கோட்பாட்டை வலுவிழக்கச் செய்விக்கும் அம்சத்தையும் சிங்கள ஆட்சியாளர்கள் திட்டமிட்டுச் செய்கின்றனர்.

வடக்கு-கிழக்கு நிலத் தொடர்ச்சியைத் துண்டாடித் தமிழர் தாயகத்தை வடக்கென்றும் கிழக்கென்றும் பிரிக்க ஒரு சிங்களக் குடியேற்றம் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழரின் நிருவாக மாவட்டங்களை நிலத் தொடர்ச்சியில்லாமல் துண்டாடிச் சிதைக்கச் சில சிங்களக் குடியேற்றங்கள்... என்று சிங்கள ஆட்சியாளர்களின் சதித்திட்டம் நீளுகின்றது.

இதன் தொடர்ச்சியாகக் கிழக்கு நிலத்தை இலக்குவைத்து மாகாணசபைத்தேர்தல்என்ற வடிவத்தில் சதி முயற்சியில்இப்போது மஹிந்த அரசு ஈடுபட்டுள்ளது.

கிழக்கில் ஒரு பாரியபடையெடுப்பைச் செய்து தமிழ் மக்களைக் குடியெழுப்பிக் கலைத்து - அவலங்களை விதைத்து. அந்த நிலத்தை படைகள் ஆக்கிரமித்தன இப்போது அந்த நிலத்தின் அரசியல்உரிமையைக் கையிலெடுக்க ஆட்சியாளர்கள் முனைகின்றனர்.

தமிழரின் தேசியத்திற்குத் துரோகமிழைத்தபடி - சிங்கள ஆட்சியாளர்களின் அடிவருடிகளாக - துணை இராணுவக் குழுக்களாகச் செயற்படும் தமிழ்க் குழுக்களைத் தேர்தலில் நிறுத்தி- மக்களை மிரட்டி வாக்கு போடவைக்கும் ஜனநாயக விரோதச்செயலை மஹிந்த அரசு செய்கின்றது.

இந்த தமிழ்த் துரோகிகளைத் தமிழரின் அரசியல் பிரதிநிதிகள் போல் காட்டி -கிழக்கு நிலத்திலுள்ள பேரினவாத நலனை அடையச் சிங்கள ஆட்சியாளர்கள் முனைகின்றனர். இதன் தொடர்ச்சியாக கிழக்கு அபிவிருத்தி என்ற பெயரில் வெளிநாட்டு உதவிகளைப் பெற்று அந்த நிதியைத் தமிழருக்கு எதிரான போருக்குத் திருப்பிவிடும் திட்டத்துடனும் சிங்கள அரசு உள்ளது.

மகிந்த அரசு நடாத்தத் துடிக்கும்இந்த (கிழக்கு)மாகாண சபைத் தேர்தலின் சதி நோக்கத்தையும் அதன் விளைவுகளையும் உலக நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும் என்று புலிகள் இயக்கம் கோருகின்றது.

தமிழரின் தாயகநிலத்தைச் சிதைக்கச் சிங்கள அரசு எடுக்கும் இந்த ஜனநாயக விரோத முயற்சி தமிழ்- சிங்கள இனப்பிணக்கைமேலும் சிக்கலாக்கி விடவே உதவும் என் பதையும் உலகம் புரிந்துகொள்ள வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# கிழக்கில் துணைப்படையின் உதவியுடன் மஹிந்த நடத்தியது மோசடித் தேர்தல்

## பாக்கியசோதி சரவணமுத்து சாடல்

(கொழும்பு)

கிழக்கில் படையினருடன் சேர்ந்தியங்கும் துணைப் படையினரின் உதவியுடன் மஹிந்த ராஜபக்ஷ ஒரு மோசடித் தேர்தலை நடத்தியுள்ளார் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் நிர்வாகி பாக்கியசோதி சரவணமுத்து சாடியுள்ளார்.

கிழக்கு தேர்தல் தொடர்பாக கொழும்பிலிருந்து புதன்கிழமை வெளிவந்த 'த மோர்னிங் லீடர்' வார ஏட்டில் அவர் எழுதியுள்ள கட்டுரையின் தமிழ் வடிவம்:

மூன்று ஆசனங்கள் வித்தியாசத்தில் கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் கைப்பற்றியுள்ளது. 2005ஆம் ஆண்டு தேர்தலின் போது எதிர்க்கட்சித் தலைவர் கிழக்கில் மகத்தான வெற்றியை பெற்றிருந்தார். எனினும், இந்த நிலைமையை கூட்டமைப்பு அரசாங்கம் மாற்றியது.

பிரசார நடவடிக்கைகள் தொடங்கியது முதல் தேர்தல் நாள்வரை பல்வேறு வன்முறைகளும் மோசடிகளும் அநாயாசமாக அரங்கேற்றப்பட்டுள்ளன. தேர்தல் முடிவுகள் தொடர்பான நம்பகத்தன்மை வெகுவாக குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. வட மத்திய மாகாணத்தில் நடந்த கறை படிந்த தேர்தல்களுக்கு நிகரானதொரு தேர்தலாகவே அண்மைய கிழக்கு தேர்தல்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

தேர்தல் பிரச்சார காலத்தில் அரசாங்கம் மோசமான முறையில் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகவும், பிள்ளையான் குழுவினர் ஆயுத அத்துமீறல்களை கட்டவிழ்த்து விட்டதாகவும் கண்காணிப்பாளர்களும் அரசியல் கட்சிகளும் முறைப்பாடு செய்திருந்தன. சாதாரண வாக்காளர்கள் தேர்தல் வன்முறைக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க முடியாத நிர்க்கதியான நிலையிலேயே காணப்படுகின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களும் தீவிரமான வன்முறைகளை கிழக்கில் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். வாழைச்சேனை, காத்தான் குடி, பொத்துவில் போன்ற பிரதேசங்களில் மிக மோசமான தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் நடந்தேறின.

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்ற வாக் குச் சாவடிகளில் மீள வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என தேர்தல் வன்முறைச்சம்பவங்களை கண்காணிக்கும் நிலையம் தெரிவித்துள்ளது.

வாக்குச்சீட்டு மோசடி, வாக்குச் சாவடி பிரதிநிதிகள் விரட்டியடிக்கப்பட்டமை மற்றும் வாக்களிப்பு மையங்களில் ஆயுததாரிகளின் செயற்பாடுகள் போன்ற சம்பவங்களை அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. இந்த தேர்தல் வன்முறைச் சம்பவங்களின் மூலம் மீண்டுமொரு முறை 17ஆவது திருத்த அமுல்படுத்தலின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது.

பிரதானமாக அரசியல் சாசன பேரவையின் உருவாக்கலும், சுயாதீன ஆணைக் குழுக்களின் உருவாக்கலும் மிகவும் இன்றியமையாததாக பரிந்துரைக்கப்படுகிறது. முக்கியமாக சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, சுயாதீன காவல்துறை ஆணைக்குழு மற்றும் பொதுத்துறை ஆணைக்குழு ஆகியன அமைக்கப்படுவதன் மூலம் அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

17ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பிரச்சினைகளுக்கு பூரணமாக தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது என்ற போதிலும், சட்டமூலம் அமுல்படுத்தப்பட்டிருந்தால் இந்தளவு பாரதூரமான வன்முறைகள் மற்றும் மோசடிகளை ஓரளவுக்கேனும் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். அடக்கு முறைகளை பிரயோகிக்க முனையும் அரசியல்வாதிகளுக்கு எதிராக ஓரளவுக்காவது செயற்படக்கூடிய வல்லமையை சுயாதீன ஆணைக்குழுவின் மூலம் ஏற்படுத்த முடியும்.

அரசியல்வாதிகளுக்கு எதிராகச் செயற்பட்டால் வழமையாக வழங்கப்படும் தண்டனை இடமாற்றங்கள் வழங்கப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை சுயாதீன ஆணைக்குழுவினால் அதிகாரிகளுக்கு வழங்க முடியும். தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளால் (பிள்ளையான் குழு) கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் அம்பலமாக்கப்பட்டுள்ள நிலைமை, பிள்ளையான் குழு அல்லாதோரினால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளை மூடிமறைக்க ஓர் சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

17ஆவது திருத்தத்தின் மூலம் நியமிக்கப்படும் தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகத்திற்கு வாக்களிப்பு மையங்களின் வாக்கெடுப்பை இரத்துச் செய்யவும், மீள வாக்கெடுப்பை நடத்துவதற்கான பூரண அதிகாரம் காணப்படுகின்றது. வாக்கெடுப்பு மீள நடாத்தப்பட வேண்டும் என்பதை வாக்கெடுப்பு மையத்தின் புறச்சூழ்நிலையும், புறக்காரணிகளுமே நிர்ணயிக்க வேண்டும் என்பது மிக முக்கியமான ஓர் கருதுகோளாகும்.

வாக்காளர்களை அச்சுறுத்தல், ஆயுதச் செயற்பாடுகள் மற்றும் குறித்த ஒரு வாக்காளருக்கு வாக்களிக்க வேண்டும் என கட்டாயப்படுத்தல் உள்ளிட்ட பல வன்முறைச் செயல்கள் வாக்கெடுப்பு மையத்திற்கு வெளியிலேயே இடம்பெறும்.

வாக்கெடுப்பு தொடங்குவதற்கு முன்னதாகவே வாக்களிப்பு மையத்தைச் சேர்ந்த பணியாளர்களுக்கு விடுக்கப்படும் மிரட்டல்கள் மற்றும் இன்னொரென்ன அழுத் தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையின் கீழ் வாக்களிப்பு மையங்களின் அகச்சூழ் நிலையை மாத்திரம் கருத்திற்கொண்டு நியாயமானதும், சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெற்றது என்ற முடிவுக்கு வரமுடியாது.

வாக்குச்சாவடிகளில் மோசடிகள் இடம் பெற்றால் மீள வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் அநேக சந்தர்ப்பங்களில் எச்சரிக்கை விடுத்த போதிலும் வழமைபோன்று எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கிழக்கின் முதலமைச் சராக பிள்ளையான் நியமிக்கப்படாவிட்டால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் வன்முறை சார் செயற்பாடுகள் மேலும் தீவிரமடையக்கூடும்.

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து கிழக்கை மீட்டெடுத்ததன் பயனை அரசாங்கத்தினாலோ அல்லது தமிழ் மக்களாலோ இதனால் அடையமுடியாது போகும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

பிள்ளையான் முதலமைச்சராக நியமிக்கப்படாத விடத்து பாதகமான எதிர்விளைவுகளை சந்திக்க நேரிடும். கிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான போர் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் போது பிள்ளையான் குழுவினர் அரசாங்கத்திற்கு காட்டிய நன்றி விசுவாசத்திற்கு உரிய பிரதி உபகாரம் கிடைக்கப்பெறாவிடின் பிள்ளையான் குழுவினரின்செயற்பாடுகள் மாற்றமடையலாம்.

13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் வழங்கப்படவுள்ள காவல்துறையினருக்கான அதிகாரம் குறித்து பிள்ளையான்அதிக முனைப்பு காட்டுவதாகத் தோன்றுகிறது.

அடுத்த அரச தலைவர் தேர்தல்களை இலக்கு வைத்து இவ்வாறான பல மாகாண சபைத் தேர்தல்களை அரசாங்கம் நடத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறான தேர்தல்களில் அடையும் வெற்றியின் மூலம் எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்தி அவற்றின் மனோதிடத்தை சீர்குலைப்பதே அரசாங்கத்தின் பிரதான வியூகமாக அமைந்துள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் பிள்ளையானின் செயற்பாடுகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும் என்பதில் எவ்வித ஐயப்பாடுகளும் இல்லை. அப்படியானால் எங்களின் நிலைமை? என்று அவர் தனது கட்டுரையின் இறு தியில் கேள்வி எழுப்பியுள்ளார். (அ-5)

ஒவ்வொருவனும் தன்னை அறிஞன் என்று நினைக்கிறான். அதனால்தான் இத்தனை முட்டாள்கள் இருக்கிறார்கள்.
-இந்தியா

வலம்புரி

## ஜனாதிபதியை அவமதிக்கும் பிரதமரின் கருத்து

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என இந்த நாட்டின் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க கூறியுள்ளார்.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை. இங்கு பயங்கரவாதமே உள்ளது எனக் கூறியவர் முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கா.

சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற போதிலும் தனது பதவியிலிருந்து விலகமாட்டேன் என அடம்பிடித்த டி.பி.விஜயதுங்கவிற்கு ஒரு வீடும் ஏனை வசதிகளும் கொடுத்தே பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை எனக் கூறிய அந்த முன்னாள் ஜனாதிபதி பற்றி நாட்டு மக்கள் எவருமே அலட்டிக் கொள்ளவில்லை.

இதுவே இலங்கையில் அரசியல் தலைவர்கள் பலருக்கு நேர்ந்த கதி.

இப்போது பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை எனக் கூறுகிறார்.

இவ்வாறு கூறுவதன் மூலம் உலக நாடுகளுக்கு தான் பதிலளிப்பதாக அவர் கருதினாலும் அவரின் மேற்போந்த கூற்று, ஜனாதிபதியையும் இனப்பிரச்சினைத் தீர்வில் தொடர்புபட்ட அமைச்சர்கள், அரசியல்வாதிகள் போன்றோரையும் அவமதிப்பதாக அமைந்துள்ளது.

அதாவது இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும். அதற்காக சர்வகட்சிக்குழு அமைக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உலக நாடுகளுக்கு தெரிவித்திருந்தார்.

ஆனால் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் கருத்துப்படி இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை.

ஆக, இல்லாத ஒன்றுக்காக சர்வகட்சிக் குழுவை அமைத்து ஜனாதிபதி நாட்டு மக்களையும் உலக நாடுகளையும் ஏமாற்றியுள்ளார்.

அதேநேரம் தெரிவுக்குழுவின் நிதிசார் செலவுகளும் தேசிய செல்வத்தை வீணடிப்பதாக உள்ளது என்றவாறு பிரதமரின் கருத்து அமைவதால் அது ஜனாதிபதியைக் கிண்டல் செய்வதாக அமையும்.

இதற்கு மேலாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் சர்வகட்சிக்குழுவின் தலைவராக இருந்த பேராசிரியர் திஸ்ஸ விதாரண, இல்லாத ஒன்றுக்காக தீர்வு காண முனைந்துள்ளதுடன் தீர்வுத் திட்டம் என ஒரு ஏமாற்றுப் பொதியையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்து கேலிக் கூத்தாடியுள்ளார் என்பது இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்று கூறுவதனூடாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க முன்வைக்கும் குற்றச்சாட்டாகக் கொள்ளலாம்.

இப்போது இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்ற பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் கருத்தை அரசும் ஜனாதிபதியும் நிராகரித்து அறிக்கையிடாத வரை, இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாதென்ற முடிவுக்கு நாமும் சர்வதேச சமூகமும் வருவதில் எந்தத் தவறும் இல்லை.

# லண்டனில் ஜனாதிபதி ஆற்றிய உரை நாட்டுக்கு நல்ல பலனை கொண்டுவரும்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நம்பிக்கை

(கொழும்பு)



பிரித்தானியாவிலுள்ள ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழகத்தின் ஒக்ஸ் போர்ட் யூனியனில் உரையாற்றுவதற்குக் கிடைத்த அரியவாய்ப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எமது நாட்டுக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடிய விதத்தில் பயன்படுத்திக் கொண்டார் என ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது, ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் விஷேட உரை நிகழ்த்திய ஜனாதிபதி இலங்கையின் தற்போதைய உண்மைநிலையை சர்வதேச சமூகத்துக்கு விளக்கிக் கூறினார்.

புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றியும் அதனால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்க அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளையும் அவர் விவரித்தார். உலக நாடுகள் அளிக்கும் உதவிகளில் தொடர்ந்தும் தங்கியிருக்க இலங்கை விரும்பவில்லை. தனது சுய உற்பத்திகளுக்கு உலக நாடுகளில் நல்ல சந்தை வாய்ப்புக்களையே அது நாடுகின்றது என்பதையும் தெளிவு படுத்தினார்.

ஜனாதிபதியின் உரையின் பின்னர் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் அங்கு சர்வதேச சமூகத்தால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு ஜனாதிபதி மிகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் பதிலளித்தார். இந்த உரை நாட்டுக்கு நல்ல பலனைக் கொண்டுவரும் என எதிர்பார்க்கலாம் என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (அ-5)

# அரசாங்கம் இனவாதத்தை வளர்ப்பதான குற்றச்சாட்டில் எதுவித உண்மையும் இல்லை

## அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் கிழக்கில் இனவாதத்தை வளர்ப்பதாக சில ஊடகங்கள் சுமத்தும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்தின் போது ஐ.தே.கட்சியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒன்றிணைந்து மக்கள் மத்தியில் இனவாதத்தை வளர்த்தனர்.

முஸ்லிம்கள் மத்தியில் அவர்கள் உரையாற்றும்போது கிழக்கு மாகாணத்துக்கு ஒரு முஸ்லிம் முதலமைச்சரைப் பெற்றுக் கொள்ள வாக்களியுங்கள் என்று கூறினர். தமிழ் மக்கள் மத்தியில் அவர்கள் உரையாற்றியபோது வடக்கையும் கிழக்கையும் இணைத்த தாயகத்தை உருவாக்க வாக்களியுங்கள் என்று கூறினார்கள்.

நாட்டில் இன்வெறிக்கு தூபமிட்டவர்களும் யாழ்ப்பாண நூலகத்தை எரித்தவர்களும் ஐ.தே.கட்சியினர் தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆனால் எமது ஜனாதிபதி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவும் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தவும் தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார் என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (அ-5)

## புதிய மோட்டார் சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகள் விநியோகம்

யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கான இலக்கத்தகடுகள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

NPTV-7634 தொடக்கம் NPTV-7915 வரையான மோட்டார் சைக்கிளுக்கான இலக்கங்களைப் பெற்றுக் கொண்ட உரிமையாளர்கள் தங்களின் வாகனப் பதிவுப் புத்தகம், வாகன அடையாள அட்டை (VIC) மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை சமர்ப்பித்து எதிர்வரும் 19.05.2008, 20.05.2008 ஆகிய விடுமுறை நாட்களில் காலை 9.00மணிமுதல் பி.ப 1.30 மணிவரை இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்வதுடன் 13.05.2008 ஆந் திகதிக்கு முன்னர் புதிதாக பதிவு செய்த மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் இத் தினத்தில் தமது வாகனப் பதிவுப் புத்தகம், வாகன அடையாள அட்டை, இலக்கத் தகடுகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார். (அ)

## ஒலுவில் துறைமுக நிர்மாணத்துக்கு டென்மார்க் உதவி

(கொழும்பு)

ஒலுவில் துறைமுக நிர்மாணப் பணிகளுக்கு டெர்மார்க் அரசாங்கத்தின் உதவியை பெற்றுக் கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இதற்கான பிரேரணையை பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலா பிட்டிய முன்வைத்திருந்தார்.

16ஆயிரம் தொன்னுக்கும் அதிக எடையுள்ள கப்பல்களை நிறுத்தி வைப்பதற்கான 11 மீட்டர் ஆழமான தடாகத்தை அமைப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும். (அ-5)

## திருமலை மாவட்ட புனரமைப்புக்கு பிரான்ஸ் 64 மில்.யூரோ நிதி உதவி

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனரமைப்பு செய்வதற்காக பிரான்ஸ் நாட்டின் உதவியை பெற்றுக் கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கான பிரேரணையை பிரதி நிதிஅமைச்சர் ரஞ்சித் சியம்லாபிட்டிய முன்வைத்திருந்தார். சுனாமியால் பாதிக்கப்பட்ட திருகோண மலை மாவட்டத்தில் புணரமைப்புப் பணி களை மேற் கொள்ள பிராஸ் 64மில் லியன் யூரோக்களை வழங்கியுள்ளது.

இந்த நிதி சேதமடைந்த பாலங்கள், பெருந்தெருக்கள், நீர்விநியோகத் திட்டங்கள், மின் விநியோகத் திட்டங்கள் என்பவற்றை மீளமைக்கவும் பொதுவசதிகளை மேம்படுத்தவும் செலவிடப்படும். (அ-5)

## ஓலைச் சுவடிகள் 29

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### கூட்ட ஜெபம் நோயைத் தணிக்குமா?

முழுநம்பிக்கையுடன் மனதார ஜெபம் செய்தால் எந்தநோயும் குணமாகும் என்று நம்புகின்றவர்கள். கூட்டமாக ஜெபம் செய்தால் பல நோய்கள் தற்காலிகமாகவாவது பலன்தரும் என்று நிரூபிக்க பல எடுத்துக்காட்டுகளை நாம் சுட்டிக் காட்ட முடியும்.

உடலில் வரும் கட்டிகள் மறைந்து போதல், நெடுநாளாய் இருந்தவாதம் தணிதல், ஆஸ்த்மா முதலிய மூச்சுக்குழாயின் நோய்களிலிருந்து சுகம், கனவு, பயம், உயர்ந்த இரத்த அழுத்தம், சில வகை இருதய நோய்கள் என்பவை களி லிருந்து நிவாரணம் பெறுதல் முதலிய அதிசயங்கள் கூட்ட ஜெபத்தினால் நிகழ் வதுண்டு- ஒரு தனிப்பட்ட நபர் ஜெபம் செய்தால் குணமடையலாம் என்ற நம் பிக்கை வைத்திருக்கும் நோயாளிக்காக அந்த நபர் வழியாக மட்டுமே நிவாரணம் கிடைக்கும் என்பதும் நாம் காண்பதுண்டு. கூட்டஜெபங்களின் பாடல்கள், உயர்ந்த நிலையிலான வாத்திய இசை, தாளம் நிறைந்த ஆர்ப்பரிப்பு முதலியவையால் ஒரு மாறுபட்ட மன நிலைக்குள்ளாகும்.

நோயாளிகட்கு மட்டுமே நம்பிக்கை ஜெபம் பலிக்கின்றது என்று சரித்திரம் கூறுகின்றது. இது ஒரு மனது சம்பந்தமான சிகிச்சையாகும். 'சைகோதெரபி' என்ற பேரில் மனோதத்துவ நிபுணர்களும் இதே முறையில் சிகிச்சை அளிக்கின்றனர். மேலும் பைத்தியம், எயிட்ஸ் முதலிய நோய்கள் கூட்ட ஜெபத்தால் குணப்படுத்த இயலாது என்று நவீன மருத்துவத்துறை கூறுகின்றது.

# பதவிகளுக்காகப் பேதங்களை ஏற்படுத்தாது...

மாகாணத் தேர்தலில் தெரிவான உறுப்பினர்கள் உடனான சந்திப்பொன்று நேற்று நண்பகல் அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். தேர்தல் நடைபெற்ற தினத்திற்கு முன்னர் கூட அம்பாறை நகரில் குண்டினை வெடிக்கச் செய்து சிறந்ததொரு தேர்தல் நடைபெறாதிருக்கும் வகையில் விடுதலைப்புலிகள் சதி வேலைகளில் ஈடுபட்டனர்.

ஆயினும் அவர்களின் சதித் திட்டம் மக்களால் நிராகரிக்கப்பட்டதுடன் ஜனநாயகத்தையும் நிலைபெற அரசாங்கம் வழிவகுத்துள்ளது.

இந்த ஜனநாயகம் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டுமாயின் தேசிய ஒற்றுமை பேணப்படும் வகையில் கிழக்கு மாகாணத்திற்குள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்ட கட்சிகளின் உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் ஆகிய அனைவரினதும் கருத்துக்களுக்கும் மதிப்பளித்தே கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவு செய்யப்படுவார்.

அதன் அடிப்படையிலேயே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் அனைவரும் தமது அபிப்பிராயங்களை ஜனாதிபதிக்குத் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரதும் அபிப்பிராயங்களைத் தாம் கருத்தில் கொண்டே தீர்மானம் எடுக்கப்போவதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ச-5)

## ஹிஸ்புல்லா...

எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவுடன் சுவைபர் சாஹிர், ஜவாஹிர் ஆகியோர் தனித்து இயங்கும் முடிபை எடுத்திருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா உட்பட மூவர் ஆளும் கட்சிக்குள் இருந்துகொண்டே தனித்துச் செயற்படுவதற்கு எடுத்திருக்கும் முடிபானது இந்த விவகாரத்தில் மேலும் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய நிலைமைகளினால் கிழக்கு மாகாண சபை கூட்டப்படும் சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சி முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வர முடியும் என்றும் கூறப்படுகின்றது. (ச-5)

## மற்றொரு...

லிருந்து சுமார் ஆயிரம் கிலோமீற்றருக்கு அப்பால்தான் உருவாகியுள்ளது.

இது நேற்று முன்தினம் பிற்பகல் வரை நகர்வுக் கட்டத்தை அடையவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேநேரம் வங்காள விரிகுடாவில் கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி உருவான நர்கீஸ் தாழமுக்கம் மே மாதம் 2 ஆம் திகதி மியன்மார் நாட்டில் கடும் புயலாக உருவெடுத்ததில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கிழக்கு தேர்தலுக்கு எதி...

கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களின் கைகளில் கிழக்குத் தேர்தலில் நடந்த முறைகேடுகளைக் கண்டிக்கும் வாசகங்கள் அடங்கிய பதாகைகள் காணப்பட்டன. அத்துடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்கத்திற்கு எதிராகவும் கோஷம் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற அப் பகுதியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். ஆர்ப்பாட்டம் நடைபெற்ற பகுதி யூடான போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருந் தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க,சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ் ஹக்கீம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (சு-5)

## ஜனாதிபதி கண்டனம்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று நடாத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலைத் தான் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு காயமடைந்தவர்கள் கூடிய சீக்கிரம் சுகமடையப் பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதி கூறினார். (ச)

# முதலமைச்சராகப் பிள்ளையான்...

முன்னணியில் போட்டியிட்டு அதிக ஆசனங்களைப் பெற்ற முஸ்லிம்களின் பிரதிநிதியான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவையா? அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற சந்திரகாந்தனையா? முதலமைச்சராக நியமிப்பது என்பது தொடர்பில் கடந்த ஆறு நாள்களாக இழுபறி நிலை காணப்பட்டது.

இந் நிலையில் சந்திரகாந்தனை முதலமைச்சராக நியமிக்கப் போவதாக மாகாண சபைக்குத் தெரிவாகிய உறுப்பினர்களைச் சந்தித்த போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்தார்.

இதன்படி ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்டிருந்த சத்தியப் பிரமாண வைபவத்தை நேற்றுப் பிற்பகல் நடத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்தது. இவ் வைபவத்தை 4 மணிக்கு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் ஹிஸ்புல்லா குழுவினர் திடீரென விடுத்த அறிவிப்பையடுத்து வைபவம் ஆரம்பமாவதில் தாமதம் ஏற்பட்டது.

இந் நிலையில் மாலை 5.15 மணியளவிலேயே இவ் வைபவம் ஆரம்பமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ் வைபவத்தின் போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள், முக்கிய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நியமனம் தொடர்பாக முஸ்லிம் அமைச்சர்கள் ஏமாற்றம் அடைந்துள்ள போதிலும் அதிகமான முஸ்லிம் அமைச்சர்கள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டதாகத் தெரியவருகின்றது.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களான எம்.எஸ்.அமீர் அலி, ரிசாட் பதியுதீன், நஜீப் ஏ மஜீத் ஆகியோர் இந் நிகழ்வைப் பகிஷ்கரித்தாக அமைச்சர் பதியுதீன் தெரிவித்தார். (ச-5)

# பொலிஸ் பஸ்களை இலக்கு வைத்து...

கலகம் அடக்கும் பொலிஸாரை ஏற்றிச் செல்வதற்காக தயாராக இருந்த இரண்டு பஸ்கள் சம்போதி விகாரைக்கு அருகில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடிக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த தற்கொலைக் குண்டுதாரி பஸ் ஒன்றின் மீது மோதி குண்டினை வெடிக்க வைத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத் தாக்குதலில் 7 பொலிஸார் உட்பட 10 பேர் பலியாகினர். 95ற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 6 இராணுவத்தினரும் 52ற்கும் மேற்பட்ட பொலிஸாரும் அடங்குகின்றனர்.

காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் கொழும்பு தேசிய வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குண்டு பாரிய சத்தத்துடன் வெடித்தமையால் பொலிஸாரை ஏற்றியிருந்த பஸ் ஒன்று முற்றாகச் சேதமடைந்ததுடன் மற்றைய பஸ் பலத்த சேதத்துக்குள்ளாகியது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஊழல்,மோசடிகள் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டி அதனைக் கண்டித்து மருதானைச் சந்தியில் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் ஆர்ப்பாட்டம் நடாத்தியிருந்தன.

இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடத்திற்குப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்துவதற்காகவென இரண்டு பஸ்களில் கலகம் அடக்கும் பொலிஸார் ஏற்றப்பட்டுத் தயார் நிலையிலிருந்தபோதே குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இராணுவச் சோதனைச் சாவடிக்கு முன்னால் வீதிக்கு மறுபுறத்தில் பஸ்கள் நிறுத்தப்பட்டிருந்த போது குண்டு வெடித்தமையினால் சோதனைச் சாவடியில் கடமையிலிருந்த ஆறு இராணுவத்தினரும் படுகாயமடைந்துள்ளனர்.

குண்டுவெடிப்பினால் இரு பஸ் வண்டிகள் உள்ளிட்ட அப்பகுதியினூடாகப் பயணித்துக் கொண்டிருந்த சுமார் 19 வாகனங்கள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

பொலிஸ் பஸ்கள் இரண்டு, முச்சக்கர வண்டிகள் இரண்டு, சிறிய ரக லொறி ஒன்று மற்றும் பி.எம். டபிள்யு. கார் உள்ளிட்ட சிலவே இதன்போது பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

குண்டுவெடிப்புக்கு இலக்கான மேற்படி வாகனங்கள் பலமணி நேரங்கள் வரை குறித்த பிரதேசத்திலேயே எரிந்து கொண்டிருந்தன. அத்துடன் குண்டுவெடிப்பு இடம்பெற்ற பகுதியிலிருந்து சுமார் நூறு மீற்றர் தொலைவு வரை அமைந்துள்ள கட்டடங்களின் யன்னல், கதவுகளும் பலத்த சேதங்களுக்குள்ளாகிய நிலையில் பாதையில் சிதறிக் கிடந்தன.

உயிரிழந்தவர்களில் அமைச்சர் காமினி லொக்குகேயின் வாகனச் சாரதியும் உள்ளடங்குவதாகத் தெரியவருகின்றது. ஜனாதிபதி செயலகத்திற்கு மிகவும் சொற்ப தூரத்திலேயே இந்தக் குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை மத்திய வங்கி, உலக வர்த்தக மையம், பிரபல உல்லாச விடுதிகள், முக்கிய வங்கிகளின் தலைமையகங்கள் நிறைந்த புறக்கோட்டைப் பகுதிக்கான முக்கிய நுழைவாயில் பகுதியில் இந்தக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. (ச-5)


JAFFNA COLLEGE
MARY ELIAS MEMORIAL UNDER 13
NET BALL TOURNAMENT - 2008

Will be held on
Monday the 19th May 2008 at 12.00 noon
on our College Grounds
Chief Guest:

Mrs. A.F.J.Rupasingam
(District Netball Coach, President of Jaffna District Netball Association and Umpiring Association)
*You are cordially invited.*

Jaffna College
Vaddukoddai. (C-1118) Principal



APEX HOSPITAL
(PVT) LIMITED
தேவை

மருத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
வயதெல்லை:- 18-25 கல்வித் தகைமை: -G.C.E (O/L)
விண்ணப்ப முடிவு :- 20.05.2008
விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளும் இடம்:-
நாவலர் பதிப்பகம்,
112, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C-1112)



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி


மலர்வு 31 01 1946
உதிர்வு 17 05 2007

அமரர் சாந்தநாயகி இராசநாயகம்

ஆயிரம் மலர்கள் மலரும் - நம்
அன்னையின் பாதம் சொரியும்
விழியிடைக் கண்ணீர் பெருகும் - தாய்
நினைவிடை உள்ளம் உருகும்.

எம்மோடு நீர் வாழ்ந்த காலம்
என்றுமே எம்மோடு நீளும்
உயிர்ப்போடு உம் நினைவில் நின்றோம்
ஓராண்டில் அஞ்சலிகள் செய்தோம்.

55/54, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்
இங்ஙனம்
கணவன், மகன்.



கண்ணீர் அஞ்சலி


எமது சங்க யாழ்.கிளையின்
கிளை நிறைவேற்று
உத்தியோகத்தர்
திரு.ச.குகராஜன் அவர்களின்
பாசமிகு தாயாராகிய
அமரர்
சந்திரசேகரம் மனோரஞ்சிதம்

அவர்கள் 16.05.2008 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரது மறைவிற்காக எமது கண்ணீர் அஞ்சலியையும் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்து அன்னாரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், ஆளுநர் சபை உறுப்பினர்கள்,
உறுப்பினர்கள், ஊழியர்கள், தொண்டர்கள்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்.கிளை. (C-1120)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.05.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.